REGD. M. 4642.

# திராவிடநாடு

| மலர் 6 | 10—8—47 | இதழ் 11 |
|---|---|---|

## அறியாத குழந்தை

[ ப. உ. நத்திரமணி ]

பொற்கோழி கூவிற்று பொழுது புலர்ந்ததென்!
நாழிகை சிலவே நழுவிய பின்னர்
குதித்து வந்தனர் குழவிய ரெல்லாம்!
வியந்து கோழியைச் சூழ்ந்து, பேசித்
திரண்டு நின்றனர் திருநாள் போல!
அளவிடக் கூடுமோ அவர்கொண்டாட்டம்?
சின்னஞ் சிறுவன் செல்லப் பிள்ளை
குமரன்தான் மனங் குளிர்ந்து சேவலை
உச்சி மோந்து உற்சாகத்தால்
'இச்'சென முத்தம் இசைந்து அளித்தான்!

* * *

"அழகுச் சிறகும் எழிலார் கொண்டையும்
உள்ள கோழி! உயிருள்ள பொம்மையும்!
வாங்கி யிதனை வந்தவர் யாரோ?"
"நேற்று இரவு நேரம்! அப்பார்
சந்தையி னின்றும் வந்தார்! கையில்
கொண்டு வந்தார்! கோலச் சேவலை!"
அண்ணன், கோழியை யடுத்து அதன்வாயைத்
திறக்கவும் சோளம் தன்கரத்தேடுத்து
ஒவ்வொன் றாக ஊட்டி மகிழ்ந்து
ஆடினன் குமரன்! பாடவு மானன்!

"நோயில் வாடிப் பாயில் படுத்துப்
பலநாள் வருந்தினன் பாலன் குமரன்!
வேண்டுதல் கேட்டுக் கொண்டதால், சங்கிலிக்
கருப்பன் தணித்தான் கொடிய நோயை!"
"தீராத வினையைத் தீர்க்கும் தெய்வம்
அவனே யன்றோ! அட்டி யுண்டோ?
முன்னர் கூறிய முறைப்படி எல்லாம், பூசை
கொடுத்திடப் பரங்குடன் வந்திடத்தயார்?"
"ஓ! ஓ!! தயார் தானெல்லாம்!"
"சரி! சரி!! செல்கிறேன்! சடுதியில் வருவீர்!"

* * *

"கண்ணீர் விடுகிறான் குமரன்! ஏனோ?"
"அவனுக் கென்ன அறிவா உளது?
வெளியில் சேவலை வீட்டினின்றும்
பிடித்து வந்ததே போதுமென் றனது!
எவர்தான் வரினும் என்னுடை கோழியை
விடேனென்று அடமே செய்தான்!
'சாமிக் காகச் சமைப்போ' மென்றால்
'சாமிக் கென்னையே சமைத்திடும்' என்றான்!"
"ஆமாம்! ஒன்றும் அறியாத
குழந்தை!" என்றே கூறிச் சென்றார்!

## பயன் தருமா?

—0—

'ஏன்?' என்று கேட்பது தான், முன்னேற்றத்திற்கு அடிப்படை. அறிவு வளர்ச்சிக்கு அதுவே வித்து. ஆதிக்கக்காரர்கள், என்றும் அந்தப் பண்பை முளையில் கிள்ளி எறியவே முயற்சிப்பார்கள். அரசியல் ஆதிக்கம் இதற்கு விதி விலக்கல்ல. எதேச்சாதிகார அரசு கவிழ்ந்து, அந்த இடத்தில் ஜன நாயக அரசு ஏற்பட்டதற்கும், 'ஏன்?' தான் முக்கியம். ஆட்சிப் பீடத்திலுள்ளோர் தவறான பாதையில் செல்லாமல் இருப்பதற்கும், நன்மைதரும் சட்டங்கள் இயற்றவும், நல்லாட்சி நடத்தவும், அவர்கள் செய்யும் காரியங்களை, 'ஏன்?' என்று கேட்கும் ஆற்றலுள்ளபலம் பொருந்தியஎதிர்க்கட்சி ஒன்று இருத்தல் வேண்டும். இதுவே நல்லதோர் மக்கள் ஆட்சி ஏற்பட்டுள்ளதென்பதற்கோர் எடுத்துக்காட்டு.

'ஆளப் பிறந்தவர்கள் நாங்களே, மற்றவர்கள் மதியிலிகள். மக்கள் ஒப்பம் எங்களுக்கே, எனவே மற்றவர்க்கு ஏது அதட்டிக் கேட்கும் உரிமை!' என்றெல்லாம் பேசுவோர் மக்கள் ஆட்சி முறைக்குத் தகுதியற்றவர்களேயாவர்; இதனை வற்புறுத்திக் கூறியுள்ளார், மராட்டித் தலைவர் தோழர் கேல்கார், அவர்களது அரசியல் மாநாட்டில். "பிரிட்டனில் உள்ளது போன்று வலிமையுள்ள இரு அரசியல்கட்சிகள் இங்கும் இருத்தல் வேண்டும். அதிகாரத்திலிருப்போரும் மற்றவர் கூறும் அறிவுரைகளை அலட்சியப்படுத்தாது ஏற்கவேண்டும். நல்லாட்சிக்கு இதுவே பண்பு. ஆனால் ஆட்சிப்பீடத்திலிருக்கும் காங்கிரஸ், தன்னைச் சேர்ந்திலாதோர் கூறும் சொற்களைப் புறக்கணிக்கிறது. இந்தப் போக்கு நாட்டுக்கு நன்மை அளிக்காது." இதனை ஆமோதித்து, தென்ஆப்ரிகாவில் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக இருந்த தேஷ்முக் அவர்களும் பேசியுள்ளார். வெற்றிக் களிப்பில் மயக்கம் கொண்டிருப்பவர்களுக்கு இப்புத்திமதி பயன் தருமா?

## கலைவாணர்

—0—

நகைச்சுவை அரசர், தோழர் N. S. கிருஷ்ணன் அவர்கட்கு, சென்னை சட்டசபைத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற, நடராஜாகல்விக் கழகக் கூட்டத்தில், கலைவாணர் என்ற பட்டம் அளிக்கப்பட்டது. நாடக உலகுக்குப் பெரும் பணியாற்றிவரும் தோழர் சம்பந்த முதலியார் இந்தப் பட்டத்தைப் பாராட்டுரையுடன், வழங்கினர். 'சொற்செல்வர்' என்ற பட்டமும் தரவேண்டும், N. S. K. அவர்கட்கு என்று மக்கள் பேசிக்கொள்ளும் அளவு ஆர்வத்துடனும், அழகுடனும் N. S. K. பேசினர்—வறுமைக்கும் கலைக்கும் உள்ள தொடர்பு பற்றி — சிறைச் சிந்தனைக் கூடம் ஆக்கிக் கொண்டதுபற்றி, எல்லாம். வாழ்க கலைவாணர்! வளர்க அவர் புகழ்!

## பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்குப் பஞ்ச நிலைமைதான் உண்டு, ஏனெனில்அங்கு தொழில்வளமே கிடையாது, அதிலும் குறிப்பாக ஆடை தயாரிக்கும் ஆலைகள் கிடையாது என்றுபுள்ளிவிவரங்களைக்காட்டிப் பிர்லாக் கூட்டம் கேலி பேசிற்று. இப்போது—இதற்குள்—பாகிஸ்தான் என்ன வேலை செய்கிறது தெரியுமோ! பாகிஸ்தானிலிருந்து தலால், லோதா, ஹாக்கல், எனும் நிபுணர்கள், பாகிஸ்தானுக்கு ஆலைகள் அமைக்கும் திட்டத்தைத்தயாரித்துக்கொண்டுள்ளனர். எங்கே? கராச்சியிலா? இல்லை! வெளிநாட்டிலே—பார்சிலோனாவில்! ஸ்பானியர்களுக்குச் சொந்தமான ஆலைக்கூட்டுக் கம்பெனியாரிடம், பேசிக்கொண்டுள்ளனர், புதியதிட்டத்தை நிறைவேற்றுவதற்காக. கேலி பேசினர் ஆலை இல்லை என்று. அரசு இல்லாதவர்கள், புதிய அரசு ஏற்படுத்திக் கொண்டபோது, ஆலைகள் புதிதாக அமைத்துக்கொள்வதுதானா ஆகாத காரியம் வெறும்கேலி பேசிபபேசியேதானே, வருவது வாடிக்கையாகிவிட்டது, காங்கிரஸ் தலைவர்களுக்கு. கேலி செய்பவர்கள் செய்துகொண்டிருக்கட்டும், நமது ஜோலியைக்கவனிப்போம், என்று கருமமேகண்ணாயினர் பாகிஸ்தான் தலைவர்கள்—வெற்றி பெற்றுவருகிறார்கள்.





தமிழ் ஒளி
எழுதியது

பொதுவுடைமைத் தத்துவத்தை விளக்கும்உயர்ந்த காவியம். சமீப காலத்தில் வெளிவந்துள்ள காவியங்களில் இதுவே சிறந்தது என்பதுதமிழறிஞர்களுடைய ஏகோபித்த கருத்தாகும்.

விலை 1—8—0.

மாஜி மனிதர்கள்

ருஷ்ய சிறுகதை மன்னன் என்று புகழப்படும் மாக்ஸிம் கார்க்கி
எழுதிய உலகப்புகழ்பெற்ற சமூகச் சித்திரம்.
எளியதமிழில் சுவை குன்றாமல் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

விலை 1—12—0

புதுயுக நிலையம்

233, லிங்கசெட்டித்தெரு, சென்னை 1.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# இழந்த இன்பம்

பத்தாண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருந்தால் தானே தெரியும்! அந்த பளபளப்பும், வனப்பும், வசீகரமும், இப்போது மங்கிவிட்டது. இன்று நடையிலே தளர்வு! தாடையிலே சுருக்கம்! இடையிலே பிடிப்பு! உடையிலே அலட்சியம்! சடையிலே நரை! என்றாகிவிட்டது, என முன்னால் பருவ மங்கையாக இருந்து இன்று மாதாகி, வயது முதிர்ந்த அம்மை கூற, இன்று இளமங்கையாக; இன்ப வாடையை எங்கும் பரப்பும் இயந்திரமாக, பிடியிடையும், குழல் மொழியும், பெடைநடையும் கொண்டவள், நாளை நமக்கும் இக்கதி தானோ, என்று ஏங்க அது கண்டு நகைத்துக்கொண்டே உலகு நகர்ந்து கொண்டே போகிறது.

நேற்று — இன்று—நாளை! ஆம், இந்த மும்மொழி, முப்பருவத்தை, மூன்று நிலையை, மூன்று முக்கிய சகாப்தத்தைக் காட்டுகின்றன.

நேற்று அலர்ந்திருந்த ரோஜா, இன்று, கூந்தலை விட்டுக் கீழே இறங்கி குப்பைமேடு போகிறது. இன்று "மொக்காக" இருப்பது, நாளை மலரும்; மணம் வீசும், மனதுக்கு உல்லாசத்தைத் தரும்! இது பருவ மாற்றத்தினால் நிலையுங் குணமும் மாறும் இயற்கையைக் குறிப்பதாகும்.

## நாட்டு நிலையை மாற்ற முடியும்

ஆனால் இயற்கையின் போக்கை செயற்கை முறைகொண்டு செப்பனிட்டு, வர இருக்கும் மாற்றத்தைத் தடுக்க மக்கள் முற்படுகின்றனர். பத்தாறு ஆண்டு சென்ற பழந்தோழர் மாளவியா தமது வாலிபப் பருவத்தை மீண்டும் பெறப் பரம சாதுவின் அருள் தேடினாரன்றோ!

நேற்று முற்றிய கதிருடன் இருந்த நிலம் இன்று அறுவடை காரணமாக வெறும் வெளியாகி விடுகிறது. ஆனால் நாளை மறுநாள், சின்னாள் பலநாள் சென்றேனும் நில மங்கை பச்சைப் பட்டாடை அணிந்துகொண்டு பார்ப்பவரை உற்சாகப்படுத்துகிறாள். காரணம் மனிதனின் உழைப்பு!

மக்கள் பருவத்தை மருந்து வகைகளாலும், பண்டங்களின் இயல்பை மக்கள் தம் உழைப்பாலும், மாற்றுவது சரிவர, குறைவர நடப்பினும் நடக்காது போயினும், மக்கள் தம் அறிவினால், தம் நாட்டு நிலைமையை மட்டும் நிச்சயம் மாற்ற முடியும். நேற்று இருந்தது, இன்று இருப்பது, இந்நிலை என்பதை ஆராய்ந்தறிந்து, குறை களைந்து குணங்கொண்டு நாட்டு நடப்பை அமைப்பின், நாளை, நாட்டு நிலையை நல்லதாக்க முடியும்.

நேற்றுக் குளிர், இன்று காய்ச்சல். உடனே மருந்து உட்கொள்ளாது விட்டால்—மருந்து உட்கொள்ளாததுடன் குளிர் இல்லை. காய்ச்சல் இல்லை, எல்லாம் மனப் பிராந்தி என யாரோ கூறக்கேட்டு,—குளிர் நீர் அருந்திக் கூத்தாடித் திரிந்தால் ஜன்னி கண்டு இறப்பதும் இயல்பன்றோ! அஃதே போலத்தான் இன்று பலர் காங்கிரசில் உள்ளனர்.

நேற்று நாட்டில் அசோகரின் சாம்ராஜ்யமும் பிந்துசாரரின்பிரபல ஆட்சியும், கனிஷ்கரின் கவர்ச்சி தரும் கோலாட்சியும், அக்பர் ஆட்சியும், சிவாஜியின் சிறப்பும், சேர சோழ பாண்டியர் செங்கோலும் இருந்தன. ஆனால் இந்த 'நேற்றைய நாட்களில்' ஒரு வகுப்பு முடியரசர், கொடையரசர், இசையரசர், யாருக்கும் மேலோராய் இருந்தனர். அழகிய தன்மையினர் எனக் கூறிக் கொண்டனர். ஆண்டவனின் அருள் பெற்றோர் எனச் செப்பினர்; மற்றையோரை அடக்கினர், மறையோர் எனக் கூறினர். பிறர் பொருள் எம்மது என்று புகன்றனர். பிராமணர், பூசுரர் என்றனர். இது "நேற்று" இருந்தது என்பதை எந்தச் சரித்திராசிரியரும் மறைக்க முடியாது. எந்த அரசியல் வாதியும், அந்தக் கால முதற்கொண்டு பார்ப்பன ஆதிக்கம் பல்வேறு துறைகளிலும் இருந்துவந்ததையோ, அதன் காரணமாக நாட்டுப்பழம் பெருங்குடி மக்கள் அடிமைகளானதையோ, இந்த அடிமைத்தனத்தைச் சகித்துக் கொண்டு இருந்ததால்தான், நாட்டு மக்களிடை சுயமரியாதை யற்றுப் போயிற்று என்பதையோ, சுயமரியாதையை இழந்ததாலேயே சுயாட்சி செத்தது என்பதையோ, ஆதாரங் காட்டி, இல்லை எனக்கூற முடியாது. கூறத் துணிபவர் உண்டேல், வாரும் மன்ற மேறுவோம், என அறைகூவி அழைக்கிறோம்.

நேற்று நாம் நாடாண்டவர்களை எல்லாம், காட்டைக் காட்டி ஏய்த்தோம், இன்று நம்மை இன்னவர் எனக் கண்டு கொள்ளும்படி வெள்ளையன் செய்துவிட்டான். எனவே அவனை விரட்டிவிட்டால் நாளை நாம் மீண்டும் பூசுரராக வாழலாம் என்பதுதான் காங்கிரசைக் கையாயுதமாகவும், காந்தியாரைக் கையாளாகவும் கொண்டுள்ள பார்ப்பனீயத்தின் நினைப்பு.

நேற்று நாம் பார்ப்பனீயத்தினிடம் சிக்கி, பலப்பல தொல்லைகள் பெற்றோம், இன்றுதான் சற்று

விழிப்படைந்துள்ளோம், நாளை நம் நாட்டை நாமே ஆளவும் நம்மைப் பார்ப்பனீயம் மீண்டும் பற்றுதிருக்கவும் இன்றே பாதுகாப்புத் தேடிக் கொள்வோம் என்று நாம் கூறுகிறோம்.

நேற்று இருந்தது போலவே பல ஜாதிப் பிரிவினை நாளை சுயராஜ்யமடைந்த இந்தியாவிலும் இருக்கட்டும் என அவர்கள் கூறுகின்றனர். அதற்கேற்றபடியே காரியங்கள் செய்கின்றனர். ஒரு தோட்டத்தில் பல புஷ்பங்கள் இருப்பது அழகல்லவா என அதற்கு ஆச்சாரியார் குட்டிக்கதை கூறுகிறார்.

நாம் நேற்று இருந்த ஜாதிபேதக் கொடுமை நாளை இருத்தல் ஆகாது. இன்றே அதைப் போக்கும் முறைகள் தேவை எனக் கூறுகிறோம்.

இந்த விஷயத்தில் நமது கொள்கையை ஆதரிப்பவரின் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

கண்டவர் வியக்கும் விதமாகக் கட்டமைந்த உடல் படைத்தவன் காலத்தின் கோளாறினால், தன் பலமிழந்து தளர்ந்து போனால் முன்னாளில் தனக்கிருந்த பலத்தை எண்ணி ஏங்கிப் பெருமூச்சுவிடுதல் இயற்கை.

கைநிறையப்பொருளும், பொருள் பெறும் வகையும் பெற்று வாழ்ந்து வந்தவன், திடீரெனத் தன்பொருளைப் பிறர் பறித்துக் கொண்டுபோக, வறுமையில் சிக்கிவாடும் போது முன்னாளில்தான் இருந்த நிலையை எண்ணி வருந்தாதிரான்.

கருத்துக்கிசைந்த கட்டழகனைப் பெற முடியாது போய், சமுதாயக் கட்டுப்பாட்டின் காரணமாக யாருக்கோ வாழ்க்கைப் பட்ட, வனிதை சாலையிலும் சோலையிலும், சாயங்கால வேளையிலும், தன் காதலனைக் கண்டு களித்த காலத்தை நினைத்தும், எடுத்ததற்கெல்லாம் இடியும் அடியும், உதையும் தரும் முரடனுக்கு பெண்டாளேனே என எண்ணியும் ஏங்குவதுஉண்டல்லவா!

இழந்த இன்பத்தை எண்ணிடும்போது, உள்ளம் வேதனைப்படும். இன்பத்தை இழந்ததுடன் துன்பத்திலும் சிக்கிவிட்டால் அந்தவேதனை பன்மடங்கு அதிகமாவதுடன், இழந்த இன்பத்தை மீண்டும் எப்படியேனும் பெறவேண்டுமென்ற எண்ணம் வலுத்துப் பெருத்து, வீறிட்டு எழும்.

இதுவே இன்றைய தமிழர் நிலை.

தமிழ்நாடு என்றுமே தலைவணங்கி வாழ்ந்ததில்லையே! தனிநாடாக, திருநாடாகவன்றோ தழைத்து வந்தது. ஆரியமன்றோ அதனை அடுத்துக் கெடுத்தது.

அசோகர், அக்பர், ஆகிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், மண்டியிட்டதில்லை தமிழ்நாடு. அசோகரின் கல்வெட்டு, கலிங்கத்தை, கடும்போரில் அவர் வென்றதைக் காட்டுகிறது. அசோகரின் படைபலம் கலிங்கத்துப் போரில் காடு, இரத்தக்காடாகப் போரிட்ட வீரம் ஆகியவற்றைக் காட்டுகிறது. ஆனால், மற்றுமென்ன இதில்விளக்கமாகிறது? இவ்வளவு கடுமையாகப் போரிட்டு வெற்றி பெறக்கூடிய அசோகர் திராவிட நாட்டைவெல்ல முடியவில்லை என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

## தமிழ்நாடு தனித்தே இருந்தது

சேர, சோழ, பாண்டியர்கள் மண்டலாதிபதிகளாக வாழ்ந்தனர் அக்காலத்திலும். அசோகர் காலத்தில் இவர்கள் அரசுரிமை இழக்காது தமிழ் நாட்டைத் தனிநாடாகஆண்டு வந்தனர் எனில், இது தமிழரின் தனிச்சிறப்பைக் காட்டவில்லையோ எனக் கேட்கிறோம்.

ஐம்பத்து ஆறு மன்னர்கள், ஐம்பத்தாறு தனித்தனிநாடுகளை ஆண்டு வந்த வரலாற்றைக் கூறும் சமஸ்கிருத நூல்கள் காலமுதற்கொண்டு, தமிழ்நாடு தனித்துத்தான் வாழ்ந்து வந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு 6-நூற்றாண்டுகளுக்கு முன்னர் "தமிழர் என்ற ஆரியரல்லாதார் தனி நாகரீகம், தனிமொழி, தனி வரலாறுடன் தனி நேஷனாக வாழ்ந்து வந்தனர்" என்று ஆசிரியர் பார்கீத்தர் கூறியுள்ளார்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு, "திராவிடநாட்டு மன்னர்கள் தங்கக்கொப்பரையில் சந்தனத் தைலத்தையூற்றி வைத்துக் கொண்டு வாழ்ந்தனர்" என்று கூறப்படுகிறது.

மூன்றாவது நூற்றாண்டில் திராவிடநாட்டின் அமைப்புப்பற்றிய வரலாற்றை அக்காலத்திலிருந்த வரலாற்று நூல்களில் வரைந்திருக்கின்றனர்.

திருநெல்வேலிக்குத்தென்கிழக்கே 15-வது மைலில் உள்ள, ஆதிச்சநல்லூரில் ஆராய்ச்சியாளர்கள், கல்வெட்டுகளையும், திராவிடச் சின்னங்களையும் கண்டுபிடித்து எடுத்தனர். இதேவிதமான திராவிடச் சிறப்புச் சின்னங்கள், பஞ்சாப்பில், மாண்ட்காமரி ஜில்லாவிலுள்ள ஹரப்பா (Harappa) என்ற இடத்திலும், சிந்து மாகாணத்தில், லார்க்கானா ஜில்லாவிலுள்ள, மகன்ஜதாரோவிலும் கண்டெடுக்கப்பட்டன.

## திராவிட நாகரிகத்தின் சிறப்பு

எனவே ஒருகாலத்தில் திராவிட நாகரிகம், திராவிடஆட்சி, நெல்லையில் தொடங்கி நெடுக நெடுகச் சென்று, சிந்து, பஞ்சாப் வரையிலும் அதற்கு அப்புறமும் சென்றது என்று விளங்குகிறது.

பதஞ்சலி எழுதிய புத்தகம், அசோகர் கல்வெட்டுகள், மெகஸ்தனிஸ்எழுதியபுத்தகங்கள், சிலோன் நாட்டுச்சரித சம்பந்தமான புத்தகங்களான மகாவம்சம், தீபவம்சம் ஆகிய எத்தனையோ சான்றுகள், திராவிடச்சிறப்பை விளக்குகின்றன.

அதனால்தான் சர். ஜான்ஈவான்ஸ் என்பார் "மனிதசமுதாயத்திற்கே நாகரிகத் தொட்டிலாகத் திராவிட நாடு இருந்தது"—அதாவது திராவிடநாட்டில் தான் நாகரிகம் முதன் முதலாகத் தோன்றிற்று என்று கூறியுள்ளார்.

திராவிட நாட்டின் இந்தப் பண்புகள் ஏன் மறைக்கப் பட்டது? ஆரிய சூழ்ச்சியால்தான்!

ஆனால் சரித்திரத்தைத் துருவிப் பார்த்தால் ஆரியத்தின் அலங்கோலமும் திராவிடத்தின் தனிச் சிறப்பும் திராவிடத்தை அடக்க அழிக்க, ஆரியர்செய்த சூழ்ச்சியும் விளங்காமற் போகாது.

மஹா அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்தார் எனச் சரித்திரம் கூறுகிறது. ஆனால் திராவிடம் தலைநிமிர்ந்து வாழ்ந்து வந்தது அந்தக்காலத்திலும்.

அதற்குப்பிறகு ஏற்பட்ட எந்த சாம்ராஜ்யத்திலும் திராவிடநாடு சேர்ந்திருக்கவில்லை, தனித்தே இருந்தது. எந்த வல்லரசும் திராவிட நாட்டை வென்றதாகச் சரிதம் கூறவில்லை.

இந்தியாவிலேயே இணையற்ற மன்னர்கள் என்ற அட்டவணை போடுவதானால், அதில் அசோகர், கனிஷ்

(16-ம் பக்கம் பார்க்க)

# ★ ஆகஸ்டு பதினைந்து ★

—•:•—

ஆகஸ்டு பதினைந்தாம் தேதி, இந்திய சுதந்திர தினம். புதிய இந்திய சர்க்காரின் அமைப்பு நாள்.

ஆகஸ்டு—15ந் தேதி, பாகிஸ்தான் வெற்றி நாள். புதிய பாகிஸ்தான் சர்க்கார் அமைப்பு நாள்.

ஆகஸ்டு 15ந் தேதி, பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஒழியும் நாள்.

உலகிலே, பேசப்படும் நாள்.

வரலாற்றிலே இந்நாள் இடம் பெறுகிறது.

அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடுவதென, இந்திய சர்க்காரும், பாகிஸ்தான் சர்க்காரும், தீர்மானித்துள்ளனர்.

அந்நாளிலே, இந்தத் துணைக் கண்டத்திலே 200 ஆண்டுகட்கு மேலாகப் பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யக் கொடி, பாகிஸ்தான், இந்தியா, ஆகிய இரு அரச வட்டாரங்களிலிருந்தும், கீழே இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்க விடப்படுகின்றன.

இந்திய பூபாகத்திலே, பிரிட்டிஷ் ஆட்சி கூடாது, சுயாட்சியும் சுயநிர்ணயமும் வேண்டும் என்பதற்காக, முறையே காங்கிரசும், முஸ்லீம் லீகும், பணி புரிந்து வந்தன—ஆகஸ்ட்டு 15-ந் தேதி பிரிட்டிஷ் ஆட்சி நீங்குவதால், அந்நாள் வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது, இரு கட்சிகளால் மட்டுமல்ல—இரு சர்க்காராலும்.

இரு கட்சிகளுக்கும், வெற்றியிலே சிறிதளவு களங்கமும், அதன் பயனாக மனவேதனையும் இருக்கிறது.

காங்கிரஸ் கோரிவந்த, பிடிவாதமாக ஆதரித்துவந்த 'ஏக இந்திய'க் கொள்கை வெற்றிபெறவில்லை. முஸ்லீம்கள் பெருவாரியாக உள்ள பகுதிகளை, முஸ்லீம் ஆட்சியிலே ஒப்புவிக்க, காங்கிரஸ் இணங்கிவிட்டது. அதன் பயனாக, காங்கிரஸ் கொண்டிருந்த இலட்சியம் முழுவதும் வெற்றிபெறவில்லை. களங்கம் இருக்கிறது.

அதுபோலவே, முஸ்லீம் லீக், பிரிவுபடாத பாஞ்சாலம், துண்டாடப்படாத வங்காளம் இரண்டையும், தான் விரும்பிற்று—கேட்டு வந்தது—பாகிஸ்தானில், முழுப் பாஞ்சாலமும் முழு வங்காளமும் இருக்க வேண்டுமென்றுதான் தீர்மானித்து, கேட்டு, கிளர்ச்சி செய்து வந்தது. கோரியது, முழுவதும், லீகுக்குக் கிடைக்கவில்லை. பாஞ்சாலமும், வங்கமும், சிதைக்கப்பட்டு, பாகிஸ்தானில், ஒரு பகுதிமட்டுமே இணைக்கப்பட்டது. எனவே, லீக் பெற்ற வெற்றியிலும் களங்கம் இருக்கிறது.

எனினும், இரு கட்சிகளும் வெற்றி விழாவாக ஆகஸ்ட் 15ந் தேதியைக் கொண்டாடுகின்றன.

கோரியதில் பெரும்பகுதி கிடைத்தது என்பதாலும், கிடைத்த உரிமை ஒரு இருநூறு வருஷ காலமாக அன்னியனிடம் இறந்துவிட்டதை மீண்டும் பெறும், மகத்தான வெற்றி ஆனபடியாலும், ஆகஸ்ட்டு 15ந் தேதியை வெற்றிநாளாக, புதிய சர்க்கார் அமைப்புத் தினமாகக் கொண்டாடுகின்றன.

யாரார் கோரியது எந்தெந்த அளவு கிடைத்தது என்பது ஒருபுறமிருக்க, மொத்தத்திலே, பிரிட்டிஷ் ஆட்சி வாபசாகிறது என்ற அளவில், விடுதலை விழாவாக ஆகஸ்ட்டு 15 கொண்டாடப்படுகிறது.

ஆகஸ்டு 15ந் தேதி, பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவு நாள்—புதிய சர்க்கார்களின் தொடக்க நாள்.

புதிய சர்க்கார்கள், எவ்வண்ணம் இருக்கும், பலன்கள் யாவை, பாமர மக்களின் நலன்கள் புதிய சர்க்கார்களால், எம்முறையிலே கவனிக்கப்படும், என்பவைகள், தனிப்பட்ட, இனிக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்னைகள்.

புதிய சர்க்கார்கள், தத்தமது ஆட்சி வட்டாரங்களிலே, நல்லாட்சி நடத்தியாக வேண்டுமென்று வலியுறுத்த, அதற்காகக் கிளர்ச்சி செய்ய, போராட, யாருக்கும் உரிமை உண்டு.

பிரிட்டிஷ் ஆட்சி, அன்றைய தினம், நீங்குகிறது, என்பது மக்களுக்குள்ள இந்த உரிமையை அதிகப்படுத்துகிறது.

அன்னிய ஆட்சி ஒழிந்து, புதுச் சுதந்திர ஆட்சிகள் ஆரம்பமாகும் இந்த நாள், அன்னிய ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும், நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி, கேட்கும் உரிமையும், பலமும், வசதியும், மக்களுக்குத் தானாகவே பிறக்கிறது.

அன்னிய ஆட்சியுடன் போரிட்டு விடுதலை பெறுவதற்காக முயற்சி எடுத்துக் கொள்ளப்படுவதால் வேறு பல, முக்கியமான, சமூக, பொருளாதார, அறிவுத் துறைகளிலே, மக்களுக்கு ஏற்ற காரியங்களைச் செய்வதற்கு, நேரமில்லை, நினைப்பில்லை, வசதியில்லை, வழி இல்லை என்று கூறி, பிரச்னைகளுக்கெல்லாம், 'வாய்தா' போட்டுவந்தகாலம் ஆகஸ்டு 15ந் தேதியோடு முடிவடைகிறது. அன்று முதல், இங்கு மக்களின் நலன், நாட்டுப் பாதுகாப்பு ஆகியவைகட்கு பொறுப்பு, இங்குள்ளவர்களிடம் வந்து சேருகிறது. ஆகவே, இங்குள்ளவர்களிடம் இம்முறையில் நடந்து நல்லாட்சி நிருவச் செய்யவும், அதற்கு அவர்கள் செவி சாய்க்காமலோ, தகுதியற்றுமோ இருப்பார்களானால், குடிஅரசு முறைப்படி, அவர்களை ஆளும் இடத்திலிருந்து விரட்டவும், மக்களுக்கு உரிமையும், வழியும் பிறக்கிறது.

திராவிடர் கழகத்தாராகிய நாம், அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலே, சென்னையில், நடைபெற்ற, மாகாண (ஜஸ்டிஸ்) மாநாட்டில், பூரண சுயேச்சை தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

பலவருஷ காலமாகவே, அன்னிய ஆட்சி நீங்கத்தான் வேண்டும், அது தான் எமது விருப்பம், ஆனால், ஆங்கில ஆட்சியை ஒழித்துவிட்டு அந்த இடத்திலே ஆரிய ஆட்சியை ஏற்படுத்தவே காங்கிரஸ் முயலுகிறது. அதற்காகவே நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறோம்—காங்கிரஸ் கையாளும் முறைகள் சரியானவை அல்ல, என்று புரிவதால், நாங்கள் அம்

# இரு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்தநாள்

முறைகளை ஆதரிக்கவில்லை. நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே, சுயராஜ்யத்துக்கு விரோதிகளல்ல—அன்னிய ஆட்சியை விரும்புபவர்கள் அல்ல, என்பதை ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசி இருக்கிறோம்.

வெள்ளைக்காரனை நீ நாளைக்குப் போ என்று சொன்னால், நாங்கள் இன்றே போ என்று கூறுகிறோம்—என்று பேசி இருக்கிறோம்.

வெள்ளைக்காரனே, ஆரியத்துக்கு அபயம் அளித்தான், என்று விளக்கி இருக்கிறோம்.

வெள்ளைக்காரனைக் கண்டிக்கவும், வெறுக்கவும், விரட்டவும், ஆரியர்களுக்கோ, காங்கிரஸ்காரர்களுக்கோ இருக்கும் உரிமையை விட, எங்களுக்கே அதிக உரிமை இருக்கிறது என்று கூறி வந்திருக்கிறோம்.

கடந்த ஜெர்மன் போர் மூண்டபோது, யுத்தத்திற்கான உதவிகளை நாம் செய்தபோதும், இந்தச் சண்டைக்குப் பிறகு, நிச்சயமாக வெள்ளைக்கார ஆட்சி நீங்கி, சுயாட்சி கிடைக்கும் என்றுமக்களுக்கு உறுதி கூறிவந்தோம்.

உலகச் சூழ்நிலை மாறுதலை எடுத்துக் காட்டி, இனி,பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துககு இங்கு ஆளவேண்டிய அவசியமோ, அதனால் இலாபமோ இல்லை ஆகையால், அந்த ஆட்சி விலகிவிடும் என்றும், மக்களுக்கு விளக்கி வந்திருக்கிறோம்.

வெள்ளைக்கார ஆட்சி, இந்நாட்டிலே மனு தர்மத்தின்படி நடக்கும் ஆட்சியாகவே இருந்து வந்திருக்கிறதென்றும், நியாயமான நமது குறைகளைக் கேட்டுக்களையவோ நீதி வழங்கவோ முன்வந்ததில்லை என்றும், இந்நாட்டிலே, ஆரியர்களுக்கே சகல வசதிகளும் கிடைக்கும்படியும், தனக்குப் பிறகு காங்கிரசே, வார்சு ஆகும்படியும் செய்து வருகிறது என்றும் எடுததுக் காட்டி, வெள்ளை ஆட்சியைக் கண்டித்திருக்கிறோம்.

ஆக, பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சி ஒழிய வேண்டும், ஒழிக்கப் பாடுபடுவோம், பிரிட்டிஷ் ஆட்சி நமக்குக் கேடு பல செய்திருக்கிறது, எனவே நம்முடைய வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளாகவேண்டியதேயாகும், என்பதைப் பன்முறை எடுத்துச் சொல்லி, நம்மை மற்றக் கட்சியினர் ஏகாதிபத்ய தாசர்கள் என்று கூறியது, வீண் பழி என்பதை எடுத்துக்காட்டி வந்ததுடன், போருக்குப் பிறகு, வந்த ஆட்சி தானாகவே விலகும் என்று முன் கூட்டியே கூறிய நாம், அந்த ஆட்சி விலகும் நாளாகிய ஆகஸ்டு **15ந்** தேதியை, மகிழ்ச்சி தரக்கூடிய நாளாகவே,கருதவேண்டும்.அதுவே இதுவரை நாம் கொண்ட போக்குக்கும், நமது கொள்கைக்கும் ஏற்றது.

ஒழிந்த ஆட்சி, உண்மையில் ஒளிந்துக் கொண்டிருக்கிறது, என்பதையோ அந்த ஆட்சி இருந்த இடத்தில், வடநாட்டு ஆட்சி அமருகிறது என்பதையோ, நாம் கூறாமலிருக்க வேண்டியதில்லை. ஆனால் அதற்காக, வெள்ளைக்கார ஆட்சி நீங்கியதனால், ஏற்படும், மகிழ்ச்சியிலும், பெருமையிலும், நமக்கு உரிய பங்கை நாம் இழக்கவேண்டும் என்பதில்லை. ஆகஸ்ட்டு 15ந் தேதி, அன்னிய ஆட்சி ஒழிந்த நாள், நம்மை நலிய வைத்த வெள்ளையர் ஆட்சி நீங்கிய நாள், ஏகாதிபத்பப் பிடி ஒழிந்த நாள். இரு எதிரிகளில், ஒரு எதிரி ஒழிந்த நாள் (மிச்சமிருப்பது பனியா ஏகாதிபத்யம்) என்பதிலே, நமக்கு மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ளக் காரணமும் அவசியமும் இருக்கிறது.

இந்த ஆட்சியை எதிர்த்து நமது கழகம் பேசியிருக்கிறது என்பது மட்டுமல்ல, இன்று நமது கழகத்துக்குத் தலைவராக உள்ள பெரியார், காங்கிரசில் தலைமை வகித்து, இந்த ஆட்சியை எதிர்த்து, கஷ்ட நஷ்டமடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழாக் கொண்டாடப் பாத்யதை கொண்டவர்களிலே,அவர் மிகமுக்யமானவர் — அவருடைய கட்சியினராகிய நமக்கு, உரிமை இருக்கிறது.

அந்த நாள், ஆரம்பமாகிற ஆட்சி, வடநாட்டவரிடம் சிக்கியிருக்கும் உண்மையை, நாம் உணரும் அளவுக்கு, மக்கள் உணரவில்லை. அந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம், விடுதலைப்போர் நடத்திய யந்திரத்தின் அருகே, வடநாட்டார் இருந்ததுதான். ஆனால், வடநாட்டவரிடம் ஆட்சி இருக்கும் நிலைமை, நமக்கு திகைப்பையோ, நம்பிக்கையற்ற நிலைமையையோ உண்டாக்க வேண்டியதில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியை ஒழிக்க முடிந்தது போலவே, தென்னாட்டைச் சுரண்டும் வேலையையே, வடநாட்டவர், ஆட்சிப்பீடத்தைப் பிடித்துக் கொண்டு செய்கின்றனர் என்பதை மக்கள் போதுமான அளவிலும், தக்கமுறையிலும் உணரும்படி செய்தால், பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியைப் போலவே, சுரண்டும் எந்த ஆட்சியையும் நம்மால் ஒழிக்க முடியும்.

இந்த உறுதியை, பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சி ஒழியும் ஆகஸ்டு 15ந் தேதி நாம் பெற முடியும்.

காங்கிரசார், அந்நாளை விழாவாகக் கருதி, வெற்றிபெற்ற களிப்புப் பெறுவதுடன் நிற்பர்—நாமோ, அந்நாள், வெள்ளை ஏகாதிபத்யம் சென்ற வழியேதான், சுரண்டும் எந்த ஆட்சியும் சென்று தீரும் என்ற உண்மையை உணரச் செய்து, உறுதி பிறக்கச் செய்யும் நாளாகக் கொள்வோம்

ஆகஸ்டு 15ந் தேதி, அறுபது வருஷப்பயிரின் அறுவடை என்றும், பட்ட கஷ்டங்கள், சிந்திய இரத்தம், வியர்வை ஆகியவற்றின் வெற்றி என்றும் காங்கிரசார் கூறவும், பெருமைப்படவும், பூரிப்படையவும், உரிமை இருக்கிறது. உவகையின் காரணமாக அவர்கள் முழு உண்மையைத் தெரிந்து கொள்ளாதிருக்கும் போது, 60 ஆண்டுகளாகப் பாடுபட்டு அவர்கள் அடைந்த பலனை ஜனாப் ஜின்னா ஆறு ஆண்டுகளிலே அடைந்ததை எடுத்துக் காட்டி, ஒரு இனமக்கள், தங்கள் உரிமையைப்பெற உறுதி கொண்டு விட்டால், வெற்றியைத் தடுக்க யாராலும் முடியாது என்ற உண்மையை எடுத்துக்காட்டி, இன்று வெற்றி பெறுதிருக்கும் திராவிடத் தனி அரசுக் கோரிக்கையும், அறுபது ஆண்டுப்பயிராகாது, ஆறுஆண்டுப்பயிராகவே கூட ஆகச்செய்ய முடியும், என்ற நல்ல நம்பிக்கையைக் கொள்ளும் நாளாக, இதே ஆகஸ்டு பதினைந்தாம் நாளை நாம் செய்து கொள்ளமுடியும்.

நாட்டுமக்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய,சுயராஜ்யத்துக்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை,

# உலகம் முழுவதும் கவனிக்கும் சம்பவம்

சிறை வாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக் கூட மனமுவந்து ஏற்றுக்கொண்ட தியாகிகளுக்கு, வீரத்தை, தியாகத்தை, கொண்ட கொள்கைக்காக கஷ்ட நஷ்டம் ஏற்கவேண்டும் என்ற கோட்பாட்டை, மதிக்கும் திராவிடர் கழகத்தாராகிய நாம், வீர வணக்கம் செலுத்த வேண்டும்.

சுயராஜ்யப் போராட்டம் என்ற உடனே, சூதுமதியினரான சிலர் அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வேட்டையாடியதும், முரண்பட்ட கொள்கைகள், திடீர் மாறுதல்கள், பண மூட்டைகள், சுரண்டுபவர், ஆகியோர் மட்டுமேதான் நமது கண்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை. நாட்டு விடுதலைக்காக, சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்ப சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமாரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறி கொடுத்த சிதம்பரம் பிள்ளை, ஆகிய வீரத்தியாகிகள் தோன்றுவர்—தோன்றுவதால்—அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தவேண்டுவதே முறை. ஆகஸ்டு 15ந் தேதி, அப்படிப்பட்ட எண்ணற்ற வீரர்களின், கனவுகள், நனவான நாள். அவர்களில் அனேகர், திராவிடத் தனி அரசு என்ற தத்துவம் அறியாதவர்கள். அவர்கள் மட்டுமல்ல, நாமே கூடச் சிலபல ஆண்டுகளுக்கு முன்பு வரை, திராவிடநாடு தனி நாடு என்ற தத்துவத்தைக் கொண்டில்லை. இன்று நமக்கு உயிர்க் கொள்கை அது. அந்த வீரர்களின் நாட்களிலே, இன்றுள்ள சூழ்நிலை இருந்ததில்லை—எனவே அவர்கள்—தமதுநாட்களில், அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டிலே உணர்ச்சியுள்ள யாருக்கும் எழவேண்டிய தேசபக்தி உணர்ச்சி கொண்டு, பணியாற்றி, பாடுபட்டு, கஷ்ட நஷ்டம் ஏற்றார்கள் என்றால், அவர்கள் இப்போது நாம் கேட்கும் திராவிடநாடு கொள்கைக்காக, அந்தக் கொள்கை பிறக்காதபோது அதற்குப்பாடுபடவில்லை என்றுகாரணம்காட்டி அவர்களை, மதிக்கமறுப்பது தமிழ் மரபுக்கே கேடு ஆகும். அவர்கள்சிந்திய இரத்தமும், கண்ணீரும், நம் வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்குவழி காட்டிகள். அவர்கள், இரத்தமும் கண்ணீரும் சிந்தினர் நாட்டு விடுதலைக்கு, அவர்களை ஆகஸ்டு 15ந் தேதி நாம் வணங்குவதுடன் நாம் கோரும் இலட்சியமாகிய திராவிட நாடு திராவிடருக்கு என்பதற்காக, அவர்களைப்போல, நாம், வீரத்தியாகத்துக்குத் தயாராக வேண்டும், என்ற உறுதியைப் பெறவேண்டும். அந்த உறுதிபெற, வீரர்களை வணங்குவது முறை, சரி, அவசியம், நீங்காக் கடமையுமாகும்.

எனவே, ஆகஸ்டு 15ந் தேதியின் முக்யத்துவத்தை உணரவும், அந்நாள், நமது கழகம் என்னவிதமான போக்கு கொள்ளவேண்டும் என்பதைத் கவனிக்கவும், அதற்குப்பிறகு, நமது வேலை முறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்காகவும், நமது கழகத்தின் நிர்வாகக் கமிட்டியோ, முக்யஸ்தர்களோ, கூடி யோசித்திருக்க வேண்டும்.

உலக முழுவதும் கூர்ந்து கவனிக்கும், ஒரு மகத்தான சம்பவத்தை, நமது கொள்கையை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு அளந்து பார்ப்பதோ, உதாசீனம் செய்வதோ சரியாகாது.

அம்முறையில் ஏதும் செய்யப்படவில்லை.

ஆனால் தலைவர், தமது அறிக்கை மூலம், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள புதிய நிலைமையை விளக்க, 9ந் தேதியிலிருந்து 12ந் தேதி வரையில், பிரசாரம் செய்ய வேண்டுமென்று கூறினார்.

நமது கழகத் திட்டத்தை விளக்கியும், பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும், அந்த இன்றியமையாத திட்டத்தைக் கவனியாமலே, எதிர்கால அரசு அமைக்கப் படுகிறது என்பதை விளக்கியும், நாடெங்கும், ஜூலை முதல் தேதிதான் கூட்டங்கள் நடத்தி இருக்கிறோம்.

அங்ஙனமிருக்க, சுதந்திர தினம் கொண்டாடப்படுகிற நேரமாகப் பார்த்து, மீண்டும், அதே விஷயத்தைவிளக்கப் பிரச்சாரக் கூட்டங்கள், அவசியமா? அந்தக் கூட்டங்களின் பலனாக, ஆகஸ்டு 15ந் தேதிய கூட்டம் நடத்தத் திட்டமிடும் காங்கிரஸ் திராவிடர்களின், மனதுக்கு, அனாவசியமான எரிச்சலை உண்டாக்கி; அவர்களின் விரோதத்தைக் காரணமின்றிச் சம்பாதித்துக்கொள்வதன்றி, வேறென்ன உருவான விளைவு காண முடியும்? காங்கிரஸ் திராவிடர்கள் அனைவரும், எந்த நாளைத் தாங்கள் பட்டபாடுகளுக்கெல்லாம் பலன் கிடைத்த நாள் என்று கருதிக் கொண்டாடுகிறார்களோ, அதே சமயமாகப் பார்த்து, அவர்களின் மனதைப் புண்ணாக்கி விட்டு, பிறகு, காங்கிரஸ் திராவிடர்களை நாம் வருந்தி வருந்தி அழைத்தால் தான் அவர்கள் வரச்சம்மதிப்பாரா? நிரந்தரமான விரோத மனப்பான்மையை வளர்க்கும் காரியமாக அல்லவா இது இருக்கிறது? பதினைந்தாம் தேதிக்குப் பிறகோ அல்லது, எப்போதும் போல, நாம் நடத்தும் இயக்கப் பிரசாரத்தின் மூலமாகவோ, நாம், நமது கொள்கையையும் திட்டத்தையும் வலியுறுத்த முடியாதா—கூடாதா—நாள் இல்லையா? ஏன், அவர்கள் மகிழும் நேரமாகப் பார்த்து, நாம், இந்தக் காரியத்தை நடத்த வேண்டும்? அவர்களை நமது இபக்கக் கருத்துக்களை உணரச் செய்யவும், அவைகளை ஆதரிக்கும்படி அழைக்கவும், இதுமுறை அல்ல; நிச்சயமாக இதுவல்ல முறை.

கடைசி வரை, நாமும், காங்கிரஸ் திராவிடர்களும், வேறு வேறு முகாம்களில் இருந்து கொண்டிருக்கச் செய்வதற்குத்தான் இது பயன்படுமே தவிர, இலட்சிய சித்திக்கு வழியல்ல.

கடந்த சிலகாலமாக, நமதுகூட்ட நிகழ்ச்சிகள் பற்றிப் பத்திரிகைகளில் குறிப்பிடும் போது, காங்கிரஸ் திராவிடர்களும் வந்திருந்தனர், என்று மகிழ்ந்து எழுதுகிறோம். அந்த நிலைமை நல்லது — வளரவேண்டும். ஆனால், இப்போது கழகம் கொள்ளும் முறை, குறைந்தது ஓர் இரண்டாண்டுக் காலத்துக்குக் காங்கிரசிலுள்ள திராவிடர்களை, நம்மை விரோதிகளாகக் கருத வைக்கவும், அதன் பலனாக, நாம் கூறுவதை அலட்சியப்படுத்தவும், எதிர்க்கவும் செய்ய வைக்குமே தவிர, நாம் கோருவதும், அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப் படுவதுமான ஐக்ய முன்னணி உண்டாக்க உதவாது.

நாமே உணருகிறோம், நாடும் உணருகிறது, இன்று, காங்கிரசிலே உள்ள திராவிடர்கள், நாம் கூறும் பல கொள்கைகளை ஆதரிக்கும்

# நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் அல்ல

நிலையை அடைந்து வருகிறார்கள் என்பதை.

காங்கிரசிலே, பார்ப்பன ஆதிக்கம் கூடாது என்று பேசுபவர்களும், வடநாட்டு ஆதிக்கம் ஆகாது என்று பேசுபவர்களும், அரசியல் வேலை முடிந்துவிட்டதால் இனி சமூக, பொருளாதார இயல்களைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று சொல்பவர்களும், சுயமரியாதை உணர்ச்சி இருக்கத்தான் வேண்டும் என்று வாதிடுபவர்களும், வளரும் நேரம் இது. பெரியார், பிராமணர்களை வாயளவில் எதிர்க்கிறார், ஆனால், ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார், பார்ப்பனரை பட்டம் கட்டியபடி இருக்கிறார்—அவர்களைக் கருவேப்பிலையாக்குகிறார்—அவரே பிராமணருக்கு உண்மையான விரோதி என்று 'பாரத தேவி' கூறும் அளவுக்கு, நிலைமை இருக்கிறது.

இவ்வளவு சாதகமான நிலைமையையும், நாம் ஆகஸ்ட்டு 15ந் தேதி பற்றிக் கொண்டுள்ள போக்கு, கெடுத்துவிடும் — வீண் பழியும்— அவசியமற்ற விரோதமும் வளரும் —அதன் பலனாக, நமது காரியம் கைகூடுவதற்கு நாமாகவே, கேடுகளை வருவித்துக்கொள்பவராகிறோம். ஜூலை முதல் தேதி நமது கழகம், நடத்திய, பிரிவினை விளக்க கூட்டத்துக்கு, வரும்படியும், கலந்துகொள்ளும்படியும், காங்கிரஸ் திராவிடர்களை (தலைவரின் அறிக்கை) அன்புடன் அழைத்தும் இருக்கிறோம். ஆனால், அவர்களும் நாமும், இந்நாட்டு மக்கள் யாவரும் சேர்ந்து மகிழவேண்டிய ஒரு மகத்தான நாளில், கலந்துகொள்ளக் கூடாது —அது நமக்குத் துக்க நாள் என்று நாம் கூறுகிறோம். சரியா? முறையா? ஒன்றுபடச் செய்யும் திட்டமா? காங்கிரஸ் எது செய்தாலும் எதிர்ப்பதே இவர்கள் வேலை என்று நம்மைப் பற்றிக் கூறப்படும் குற்றத்தை நாமே வலியச் சென்று ஏற்றுக்கொள்ளும் செயல் அல்லவா இது?

கும்பலோடு கலந்துவிட்டால், நாமும் அவர்களோடு சேர்ந்து விழா நடத்தினால், பிறகு, நமக்கென்று உள்ள கட்சி, நமக்கென்று உள்ள கொடி, நமக்கென்று உள்ள திட்டம் என்ன ஆகும்? என்று கேட்கப்படுகிறது. எதில் கலந்தாலும், தனியாக விளங்கக்கூடியதும், எப்படியும் நிலைக்கக்கூடியதுமான ஜீவசக்தி நம் கொள்கைக்கு உண்டு, என்பதிலே நமக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்குமானால், நாம், விழாவிலே கலந்து கொள்வதாலேயே, நமது கொள்கையை இழந்துவிடமாட்டோம் என்பதிலே நம்பிக்கை இருக்கும்.

அந்த விழா ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக உள்ளது. வெள்ளையர் ஆட்சி விலகுவதை உலகுக்கு அறிவிக்கும் விழா, அதிலே கலந்து கொள்வதால், நாம் நமது கொள்கையைவிட்டு விடுவதாக முடியாது. தொட்டால் துவண்டுவிடக் கூடிய, மோதினால் நொருங்கிவிடக் கூடிய, வலிவற்ற கொள்கை அல்ல நாம் கொண்டிருப்பது.

சுதந்திரவிழாவிலே கலந்துகொள்பவர்களுக்கெல்லாம், தனிப்பட்ட பிரச்சனைகள், குறைபாடுகள், இலட்சியங்கள், இல்லையா? அவர்கள் விழாவிலே கலந்து கொள்வதாலே அவரவர்களுக்கென்றுள்ள இலட்சியங்களை எல்லாம் அன்றையத்தினம், விட்டு விடுகிறார்கள் என்றுபொருள்.

உவகையுடன் அந்நாளைக் கொண்டாடும், பலரும், பிறகு அவர்களின் குறைகளைக் களைந்து கொள்ளக் கிளர்ச்சிகள் நடத்தவும், போரிடவும், பின்வாங்கப் போவதில்லை. ஏன் நாமும் அதுபோலசெய்யலாகாது.

நம்மை உதாசீனம் செய்து வந்த, காட்டிக்கொடுத்த, ஆரியருடன் கூடிக் கொண்ட, மனுதர்ம ஆட்சி நடத்திய வெள்ளையர், கொண்டாடிய யுத்த வெற்றிவிழாவிலே கூடக் கலந்து கொண்டோம், எங்களை நீ கவனிக்காவிட்டாலும் நாங்கள் யுத்தத்துக்கு உனக்கு உதவுகிறோம் என்றுகூறி ஆதரவு தந்தோம், இந்தப்போக்கு கொடுத்த பலன் என்ன? ஆகஸ்ட்டு விழாவிலே கலந்துகொண்டால் விளையும் தீமை என்ன? வெள்ளை ஆட்சிக்குப் பதிலாக வேறோர் ஆட்சிவருகிறது, அது வேதனை யல்லவா? என்று கேட்கப்படுகிறது. ஆம்! ஆம்! வேதனைதான்! வேதனை மட்டுமல்ல, வெட்கமும் கூட! ஆனால் அந்த ஆட்சியை வரவிடாது தடுக்க நாம் செய்ய முடிந்தது என்ன? இனி என்றுமே, அந்த ஆட்சியை ஏதும் செய்ய முடியாது என்று நாம் இன்று எண்ணவேண்டுமா? நமது கொள்கையின் மூலம் பலம் கிடைத்தால், இந்த ஆட்சியும், எதேச்சாதிகாரம் செய்யும் எந்த ஆட்சியும் செல்லும் வழி, போய்த்தானே தீரும். ஆகஸ்ட்டு 15, இதைச் கூட நமக்கு அறிவிக்கும் நாள் ஆயிற்றே! ஏன் அன்று நாம் கலந்து கொள்ளக் கூடாது?

நிர்வாகத் தலைவரின் அறிக்கை, மறுநாளே வெளிவந்தது. அதிலே ஆகஸ்டு 15. துக்க நாள் என்று குறிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, ஆகஸ்டு 15ல் கலந்துகொள்ளக் கூடாது என்று, 'விடுதலை' அறிவித்தது.

இந்தப் போக்கு விளக்கம் தருவதாகவோ, நமது எதிர்காலத்தைச் செம்மைப் படுத்தும் முறையாகவோ தோன்றவில்லை.

நாம், திராவிடநாடு திராவிடருக்கு என்ற கோரிக்கையை, மக்களுக்கு எடுத்துக் கூறும், அளவிலேயே தான் இன்றும் இருக்கிறோம்.

நமக்கு, ஆதரவு பெருகி வருகிறது. ஆனால், போதுமான அளவு என்று கூற முடியாது.

அறுபது வருஷ காங்கிரஸ் பணியை ஆறு ஆண்டுக் காலத்திலே ஜனாப் ஜின்னா சிறியதாக்கி விட்டதற்குக் காரணம், இந்த ஆறு ஆண்டுகளிலே, லீக் வலுத்துவிட்டது, லீகையே முஸ்லிம்களிலே பெருவாரியானவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதைவிளக்க, உலகுக்குமெய்ப்பிக்க, திட்டத்தை விளக்கிச் செய்த பிரசாரத்தை மட்டுமல்ல, காரணமாகக் காட்டியது, முனிசிபல் தேர்தலிலிருந்து, டில்லி சட்டசபை தேர்தல் வரையிலே, லீகுக்கே வெற்றி கிடைத்தது என்பதை ஆதாரமாகக் காட்டியதால்தான். நாமோ தேர்தலுக்கே நிற்கவில்லை நாட்டுப் பிரிவினைக்காக பிரிட்டிஷார் எடுத்துக்கொண்ட எந்தக் காரியத்திலும் இடம் பெறவில்லை. அரசியல் நிர்ணய சபையில் இடம் பெறவில்லை. இடம்பெற்ற காங்கிரஸ் திராவிடருடன் தொடர்புகொள்ளவும் முயற்சிக்கவில்லை.

ஒரு திட்டத்துக்கு, ஒரு இன மக்களில் பெருவாரியானவர்கள் ஆதரவு இருக்கிறது என்பதை, ஜனநாயக முறைப்படி ஜனாப் ஜின்னா காட்டியே, வெற்றி பெற்றார்.

அதுபோலவே, காங்கிரசும், சுயராஜ்ய கோரிக்கைக்குச் சகலரும்

# ஒரு தவறு இன்னொன்றுக்கு சமாதானமல்ல

ஆதரவளிக்கிறார்கள் என்பதை ஜனநாயக முறையான தேர்தல் முறைப்படியும், விடுதலைப்போர் நடத்தியும், காட்டிவிட்டது.

நாம், ஆரம்பக் கட்டத்தில், திட்டத்தைவிளக்குவதில்அதற்குஆதரவு திரட்டுவதில், இருக்கிறோம். கிளர்ச்சி இல்லை, போர்இல்லை. இன்னமும், நமது உடலிலே, இதற்காக, தியாகத்தழும்பு ஏற்படவில்லை. குமரன் இல்லை, சிதம்பரம் பிள்ளை இல்லை. இந்தி எதிர்ப்புப் போரிலே உயிரைத் தியாகம் செய்த, தாலமுத்து, நடராஜன் போன்றவர்களைத் தரக்கூடிய திராவிடச் சமுதாயத்தில், இவர்கள் போன்றார்கள் ஆகவும் தயாராக உள்ள வீரர்களைப் படைதிரட்டும் பணியிலேயே இருக்கிறோம். எனவே, துவக்காத போர் — ஆகவே வெற்றியா தோல்வியா, என்ற பிரச்னைக்கே இடமில்லை. இந்நிலையில், துக்கநாள் அவசியமா?—

நமது கொள்கை நியாயமானது. ஆனால் நியாயத்தை மட்டுமே கவனித்து, எந்த நாட்டிலும், ஆட்சியாளர்கள், நடப்பதில்லை. நியாயத்தை நிலைநாட்ட பலம் துணையாக இருக்கிறது என்றால் மட்டுமே காரியம் பலிக்கும்.

ஒரு நாட்டைமற்றொருநாடு ஆளுவது அக்ரமம் — எந்த நாடும் சுயாட்சி கேட்பது நியாயம். இந்த நியாயத்தைஎடுத்துக்கூறின உடனே காங்கிரசை மதித்து சுயராஜ்யம் கொடுக்க, எந்தக் கிரிப்சும், மவுண்ட்பேட்டனும் முன்வரவில்லை. ஏளனம் பேசும் சர்ச்சில்களாகவே தான் சகல பிரிட்டிஷாரும் இருந்தனர். நியாயத்தின் பக்கபலமாக, தியாகம், கிளர்ச்சி பணபலம், பத்திரிகைபலம், இவ்வளவுக்கும்மேலாக, உலகச் சூழ்நிலையில் மாறுதல், பிரிட்டிஷ் பலச்சரிவு, என்பவைகள் ஏற்பட்டதால் தான், மந்திரிகள் பறந்து வந்தனர்—நியாயம் வழங்க.

இதே முறையிலே தான், நமது நியாயமான கோரிக்கையான திராவிடநாடு பிரிவினையும், தியாகப் பாதையிலே நடக்கும் தீரர்களின், இரத்தம் சிந்தப்பட்ட பிறகே வெற்றிபெற முடியுமே தவிர, கொள்கையை ஆதார பூர்வத்தோடுவிளக்கி விடுவதால் மட்டும் கிடைத்துவிடாது. விடுதலைப் பாதை, விவேக சிந்தாமணியால் மட்டும் கிடைப்பதில்லை. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்னை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று எண்ணற்ற வீரர்கள் கூறிடும் அளவு வீரத் தியாக உணர்ச்சி ஏற்பட்ட பிறகே கிடைக்கும். இவைகளைச் செய்து அலுத்து, மனம் நொந்து, வெந்துபோன பிறகும் நாம் வஞ்சிக்கப்பட்டால், நமது எண்ணம் ஈடேறாவிட்டால், போர் பயனற்றுப் போய்விட்டால், துக்கம் கொண்டாடுவது முறையாக இருக்கும். துவக்க நிலையிலே, துக்கம் கொண்டாடுவது அவசியமல்ல.

மேலும், அன்னிய ஆட்சியாளராகிய வெள்ளை ஆட்சி நீங்கிய உடனே, வடநாட்டார் தான் முதலிலே பீடத்தில் அமருவார்கள் என்பது நாம் அறியாததுமல்ல, எதிர்பாராததுமல்ல. எனவே இன்று அமையும் ஆட்சியைக்கண்டு நாம் திடுக்கிடவோ திகைக்கவோ காரணமில்லை. இப்படித்தான் நேரிடும் என்பது நாம் ஏற்கனவே அறிந்ததுதான்.

எதிர்பாராத தாக்குதல், இணையற்ற போருக்குப்பிறகும் தோல்வி, இவைகளின் போது மட்டுமே ஏற்படக் கூடியது துக்கம். நாம் எதிர்பார்த்த, அதைத் தடுக்கும் வலிவை நாம் பெறவில்லை என்பதையும் நாம் அறிந்திருக்கிற நிலையில் ஏற்பட்ட ஆட்சி முறைக்காக, துக்கிக்க வேண்டிய அவசியம் இல்லை.

நம்முடைய, வீர இளைஞர்கள் மீது, இதுநாள் வரையிலே, சுமத்தப்பட்ட பழிச்சொல், நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் என்பது.

அந்தப் பிரிட்டிஷாரின் ஆட்சி முடியும் போது, நாம் துக்கம் கொண்டாடுவது, இந்தப் பழிச்சொல்லை, நாமாகவே நம்மீது சுமத்துப்படி, அவர்களை வற்புறுத்தி அழைப்பதாகும்.

நமது வாழ்நாளில், நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள்! அது ஒழிய வேண்டும் என்ற நோக்க முடையவர்கள், காங்கிரசார் பழிசுமத்தியது போல நாம்பிரிட்டிஷாரின் அடிமைகளல்ல, என்பதை விளக்க, நமக்கு இருக்கும் ஒருநாள், கடைசிநாள், ஆகஸ்ட்டு 15. நாள், ஏன் அந்தச்சந்தர்ப்பத்தை இழந்து, அழியாதபழிச்சொல்லைத் தேடிக்கொள்ள வேண்டும்.

சுதந்திர தினவிழாக் கொண்டாடப்படும் இந்த நேரத்தில், இந்தத் துணைக் கண்டத்திலே, அதிருப்திகளோ, மனக்குறைகளோ, ஏமாற்றங்களோ, இல்லாமல் போகவில்லை.

கம்யூனிஸ்டு கட்சியின், முக்கியமான உறுப்பினர்கள் சிறையிலே தள்ளப்பட்டுள்ளனர்.

B. C. மில்போன்ற இடங்களிலும் வேறுபல இடங்களிலும் உள்ள தொழிலாளர்கள், தொல்லைப்பட்டுக்கொண்டும், அடக்கு முறைக்கு ஆளாகியும் உள்ளனர்.

ஆசிரியர்கள், அதிகாரிகள், ஆகிய வேறுபலரும, போதாச் சம்பளத் தொல்லையைத் தாங்கிக் கொண்டுள்ளனர்.

போஸ் கட்சியினர், தங்கள், கோரிக்கை நிறைவேறவில்லை என்று அதிருப்திபட்டுள்ளனர்.

மற்றும் பலருக்கு பலவகை, ஏமாற்றங்கள், மனக்குறைகள் உள்ளன.

ஆனால் இவையாவும், சுதந்திரம் பெறும் பிரச்னையுடன் இணைக்கப்படவில்லை.

நிர்வாகக் கோளாறு, ஆட்சியாளர்களின் கொள்கை, திட்டம்ஆகிய பல்வேறு காரணங்களால் நேரிடும் அல்லல். ஆகையால், இவைகளைச் சாக்காகக்கொண்டு, ஆகஸ்ட்டு 15-ந்தேதியைத் துக்கநாளாகக் கருதும்படி, யாரும் எந்த ஏற்பாடும் செய்யவில்லை.

சுதந்திர தினவிழாவிலே, போஸ் கட்சி கலந்து கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஒருவாரத்திற்குள் அதிலே பிளவு ஏற்பட்டு, ஒரு பகுதியினர் கலந்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

கலந்து கொள்ளாத பகுதியும், இந்த நாளை துக்கநாளாகக் கொண்டாடும்படி, கட்சிக்கு அறிக்கைகளும், பாட்ஜுகளும் அனுப்பிக் கொண்டில்லை.

போஸ்கட்சி, துக்கநாளாகவே, இதனைக் கொண்டாடுகிறது என்று ஒப்புக்கு ஒப்புக்கொள்வதானாலுங்கூட அந்தக்கட்சி, இதுவரையில், சுதந்திரப் போராட்டத்தில் [illegible]

# மதிப்பை உயர்த்தும் நாள்

சுடன், காங்கிரஸ் வகுத்த திட்டத்தின்படி, நடந்து கொண்டவர்கள்—காங்கிரசின் அகிம்சைக் கொள்கையையும் தாண்டி, வெளிநாடுகளில் சென்று, ஆயுத மெடுத்தும் போரிட்டவர்கள். எனவே அவர்கள், ஆகஸ்ட்டு 15-ல் கலந்துகொள்ளாவிட்டால்கூட, அதற்காக அவர்களை, பிரிட்டிஷ் ஏகாதிபத்ய தாசர்கள் என்று கண்டிக்கவோ, இழிவாகப் பேசவோ, காங்கிரஸ்கூட முன்வராது.

நமது நிலை அவ்விதமானதல்ல. இந்த மகத்தான வித்யாசத்தை மறக்கக் கூடாது.

மேலும், போஸ்கட்சி, இந்து மகா சபை போன்றவைகள், பெரிதும் தலைவர்களால் பிரபப் பெற்றவைகள், பொதுமக்களின் தொடர்பு அதிகம் இல்லாதவைகள். எனவே, அந்தக் கட்சிகள், தவறுகள் செய்தால் கூட, சமாளித்துக் கொள்ள முடியும். நாம் அவ்விதமல்ல—200, 300 கிளைக்கழகங்களும், ஐம்பது அறுபதனாயிரம் உறுப்பினர்களும் கொண்ட இயக்கமாக இருக்கிறோம்—பொதுமக்களிடம் தொடர்பு, அறுந்து படாமலிருக்க வேண்டுமென்பதற்காக, நாள் தவறாமல் பிரசாரம் நடத்தி வருகிறோம்—எனவே நமது போக்கைக் கூர்ந்து கவனிக்கவும், அதன் பலனாக, நம்மைப்பற்றி மதிப்பிடவும், பொதுமக்கள் தயாராக இருப்பர். மற்றக் கட்சிகளுக்கு இந்நிலை இல்லை. இதையும் கவனிக்க வேண்டும்.

போஸ்கட்சியோ, வேறு சிலகட்சிகளோ, ஆகஸ்ட்டு 15-ந்தேதியைத் துக்க நாளாகக் கொண்டாடுவது, நாம் அதேபோக்கு கொள்வதற்குக் காரணமாகவோ, ஆதாரமாகவோ, ஆகாது.

ஒரு தவறு, மற்றொரு தவறுக்குச் சமாதானமல்ல—தவறுகள் இரண்டு என்று ஏற்படுமேதவிர வேறில்லை.

எனவே, நாம்மட்டுமல்ல, வேறு சிலரும்கூட, ஆகஸ்ட்டு 15-ந்தேதியைத் துக்கநாளாகக் கொண்டாடுகின்றனர் என்று கூறுவது, நியாயமாகாது.

நாம், ஆகஸ்ட்டு 15-ந்தேதி, ஒதுங்கி இருப்பது, அல்லது, துக்கநாளாகக் கருதுவது என்ற போக்கு, திராவிடத்திலேயும் துணைக்கண்டத்திலேயும் மட்டுமல்ல, உலகிலேயே, நம்மைப்பற்றித் தவறான கருத்து கொள்ள, நாமாகவே, இடமளிப்பதாக வந்து சேரும். சுதந்திர தின விழாவை அசல் காங்கிரஸ் விழாவாக மாறும்படி, நாமே செய்தவர்களாவோம் — அந்த விழாவுக்கு, பாத்யதை கொள்ளக் கூடியவர்கள் காங்கிரசாரே, என்று நாமே அவர்களுக்கு பட்டயம் தருவதாகவே முடியும்—அந்த நாளோ உண்மையில், இந்த துணைக்கண்டத்தினர் அனைவருக்கும், விடுதலை விரும்பிகள் அனைவருக்கும், மகிழ்ச்சிதரும் நாள்.

எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும், விடுதலைப்போர்—இரண்டோர் சம்பவங்களுடனே, இரண்டொரு வெற்றிகளுடனே முடிந்து விடுவதில்லை—அது, நீண்டதோர் பயணம். —விடுதலைப் போரிலே, பல கட்டங்கள் உண்டு—ஆகஸ்ட்டு 15-ந் தேதி, அத்தகைய கட்டத்திலே ஒன்று—ஆரம்பக்கட்டம்—முதல் வெற்றி—முக்கியமானவெற்றி—அதைத் திருநாளாகக் கொண்டாடிவிட்டு, மற்றவர்கள் பின்தங்கிவிட்டாலும், திராவிடர்கள், விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்தி, திராவிடத் தனிஅரசு பெறுவதற்குப் பாடுபட முடியும்.

திராவிடர் கழகத்தாராகிய நாம் அடிக்கடி காங்கிரசிலுள்ள திராவிடர்களை, அழைக்கிறோம், எம்முடன் சேரவாரீர், என்று. முத்துரங்கங்களெல்லாம் கூட எமது முகாமுக்கு வருவர், பாரீர் என்று கூறுகிறோம். அவ்விதம் காங்கிரசிலுள்ள திராவிடத்தோழர்கள் நமது, கொள்கையை உணர்ந்துவரவேண்டுமென்றால், அவர்கள் மனதிலே, நம்மைப்பற்றி, ஏற்கனவே உள்ள தப்பிப்பிராயங்களைத்துடைக்க வேண்டியது முறையாயிருக்க, ஆகஸ்ட்டு 15ந்தேதியைத்துக்கநாள் என்று அறிவிப்பதன்மூலம், நாமாகவே காங்கிரஸ் திராவிடர் மனதிலே, நம்மைப்பற்றி வேறோர், தவறான எண்ணம் கொள்ளும்படிச் செய்கிறோம். இந்தப் போக்கு, திராவிடர் கழகத்துக்கும் கொள்கைக்கும், ஆதரவு திரட்டும் காரியமாகாது — காங்கிரஸ் திராவிடர்களின் ஆதரவைப்பெற முடியும் என்ற நம்பிக்கையை, நமது போக்கினால் நாமே நொறுக்குபவர்கள் ஆவோம்.

நமது கட்சியின் மீதுவீசப்படும் பழிகளைத்துடைக்கும் காரியத்திலேயேவா, நாம் காலம்முழுவதும்செலவிடவேண்டும்? பலவிதமான பழிச்சொற்களையும், துடைத்து, சேலம் மாகாண மாநாட்டுக்குப்பிறகு, புத்தொளி பெற்றோம். அதனாலேதான், நாம் நமதுதிட்டங்களை விளக்கவும், முடிந்தது. இப்போதோ, புதியதோர் பழியை, தந்திரக்காரர்கள் நமது கட்சியின் மீதுசுமத்தவும். அதற்கு நாம் பதில்கூறவுமான, பழய,வழக்கமான, வேலைநமக்குவந்துசேருகிறது. அதேபோது, பட்டம் விடும் தீர்மானத்தை மதிக்க மறுத்த தோழர் S. முத்தையமுதலியாரும், கட்சித்திட்டட்டத்தை மீறி தேர்தலுக்கு நின்ற டாக்டர். கிருஷ்ணசாமியும் வந்து சேருகின்றனர். இந்த, பழி துடைத்துக் கொள்ளும் காரியத்திலேயேநாம் இருந்துகொண்டிருந்தால், எப்போதுதான், நமது திட்டத்திற்கான ஆதரவைஉருவாக்கும் காரியம் செய்வது? ஏன், நாமாக வீணுக்கு, வம்பை வாங்குவது? அதிலும், பல ஆண்டுகளாக நம்மைப் பற்றித்தவறாகக் கருதிக் கொண்டிருந்தகாங்கிரஸ்சார்திராவிடர்களிலே ஒருபகுதியினர், நம்மை அறியவும், மதிக்கவும் ஆரம்பித்திருக்கும் நேரமாகப் பார்த்தா இந்தக்காரியம் செய்வது.—?

15-ந்தேதி, பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்ததற்காக நாமும் மகிழ்வோம்—கொண்டாடுவோம் — அது ஒழிந்ததன் உண்மைக் காரணத்தை விளக்குவோம் — அது ஒழிந்ததை யார் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்பதையும் விளக்குவோம்—நமது எதிர்காலக்கிளர்ச்சி, எதன் பொருட்டு இருக்கும் என்பதையும் விளக்குவோம் — நமது இலட்சியத்துக்காக, நாமும், வெற்றிகிடைக்கும்வரை போராட உறுதி கொள்வோம் என்று காங்கிரசாருடன் கலந்துகொண்டாட்டம் நடத்தியோ தனியாகக்கூட்டம் நடத்தியோ, நிலைமையைத் தெளிவுபடுத்துவதே முறை.

**ஆகஸ்ட்டு 15ந்தேதி, இரண்டு நூற்றாண்டுகளாக இந்த துணைக்கண்டத்தின்மீது இருந்துவந்த பழிச்சொல்லை, இழிவை, நீக்கும் நாள். அது திராவிடருக்கும் திருநாள்தான்**

# விழாக்கொண்டாடுவது தவறோ துரோகமோ அல்ல

—துக்கநாள் ஆகாது.

கட்சியின் முக்யஸ்தர்கள் கலந்து பேசியோ, நிர்வாகக் கமிட்டி கூடியோ, இருந்தால், இந்நிலை ஏற்பட்டிராது.

தலைவரின் அறிக்கை, நிர்வாகத் தலைவரின் அறிக்கை, விடுதலையில் அறிக்கை, என்ற முறையிலே திடீர் திடீரென வெளிவந்தன. எனவேதான், நான் எனது கருத்தைவிளக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை-அதை வெளியிட, பத்திரிகையில் எழுதுவது அவசியமாகிவிட்டது.

ஆகஸ்ட்டு 15ந் தேதி பற்றி, ஏற்கனவே, பல அறிக்கைகள் வெளிவந்துவிட்டனவே—இப்போதுவேறு விதமாகக்கருத்தை வெளியிட்டால் என்னபயன்? எப்படி ஏற்கனவே கொண்டபோக்கை மாற்றிக்கொள்வது என்று கேட்கத் தோன்றும். நான் வெளியிடும் விளக்கம், சற்றுத் தாமதித்து வெளிவந்தது என்றபோதிலும், இவ்விதமான கருத்து, மத்திய திராவிடர் கழகம், கழகப் பத்திரிகை நிலையம், எல்லாஊர்களிலுமுள்ள திராவிடர் கழகங்கள் ஆகிய இடங்கட்கு, பொள்ளாச்சி திராவிடர் கழகத்தாரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

பொள்ளாச்சியில், திராவிடர் கழகத்தாரை, சுதந்திரவிழாவில் கலந்துகொள்ளும்படி, அவ்வூர் காங்கிரசார் அழைத்தனர். அதுபோன்றே வேறு பல ஊர்களிலும் அழைப்புகள் கிடைத்தன. அழைப்புப் பெற்ற பொள்ளாச்சித் திராவிடர் கழகம், ஆகஸ்ட்டு பதினைந்தை நாம் துக்கநாள் என்று கொள்ளக்கூடாது, உண்மையிலேயே அந்நாள் நமக்கும் மகிழ்ச்சி நாள்தான், என்று தீர்மானம்நிறைவேற்றி, எல்லாத் திராவிடர் கழகங்களுக்கும் அனுப்பிவைத்தது.

அந்த அறிக்கை, திராவிடர் கழகத்திலேயே ஒரு பகுதியினர், ஆகஸ்ட்டு 15ந்தேதிதுக்கநாள் என்று கருதவில்லை என்பதையும், சுதந்திர தினவிழாவிலே திராவிடர் கழகம் கலந்துகொள்வது முறையாகும் என்பதையும் கருத்தாகக்கொண்டுள்ளனர் என்பதைக்காட்டிற்று.

அந்த அறிக்கைக்கு 'விடுதலை' ஆபிசிலிருந்து பதில் தரப்பட்டதாகத்தெரிகிறது.

முறைப்படி நடப்பதானால், அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்ய, மத்யக்கமிட்டி கூடியிருக்கவேண்டும்.

பொள்ளாச்சித் திராவிடர் கழகத்தார் ஏற்கனவே வெளியிட்டிருப்பதால், இப்போது நான் வெளியிடும் இந்தக்கருத்துக்கள், திடீரென, கழகத்துக்கு வந்துசேருகின்றன என்று கூறமுடியாது.

இவ்வளவு தூரம், ஆகஸ்ட்டு 15-ந் தேதியைத் துக்கநாள் என்று அறிக்கைகள் மூலம் வெளியிட்டுவிட்டு, இனி எப்படி அதனை மாற்றுவது என்று கேட்பதானால், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை, இனியும் மாற்றமுடியும் என்பதை விளக்க விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, கம்பராமாயணத்தைக் கொளுத்துவதற்கெனப்பெரியார் அறிக்கை வெளியிட்டு, விசேஷமாநாடு சேலத்தில் கூட்டப்பட்டது; நான் தலைமை வகித்தேன். காலை நிகழ்ச்சியிலேகூட, கம்பராமாயணம் கொளுத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியே சொற்பொழிவுகள் நடைபெற்றன. பிற்பகலிலே, சர். சண்முகம் தந்தி கொடுத்தார், கொளுத்தவேண்டாம் என்று. அதன்படியே, கொளுத்துவது அதேஇடத்தில், அதே நேரத்தில் கைவிடப்பட்டது. அது, சரியா, தவறா என்பது அல்ல, இப்போது பிரச்னை. அந்தக் கடைசிநேரத்திலேயும், செய்யவேண்டுமென்றுகருதப்பட்டகாரியம், வேறு ஒருவரின் யோசனையின்படி கைவிடப்பட்டது.

ஆகவே, ஆகஸ்ட்டு 15ந்தேதிபற்றி திராவிடர் கழகம், தன்கருத்தை இந்த நேரத்திலும் மாற்றிக்கொள்ள முடியும் — மாற்றிக்கொள்ளலாம் — முறையுங்கூடத்தான் — அதற்குமுன் மாதிரியாகச் சேலம் சம்பவம் இருக்கிறது.

ஆனால் ஒரே ஒரு வித்யாசம். சேலத்திலே கம்ப ராமாயணத்தைக் கடைசி நேரத்தில் ஒரே தந்தியின் மூலம் கொளுத்த வேண்டாமென்று கூறியவர், ஒரு, சர். நான் ஒரு சாமான்யன். அவர் கட்சிக்காக, ஓய்வு நேரத்திலும் உழைத்ததில்லை-நான் உழைத்து அலுத்தவன், அவர் இன்று இந்திய சர்க்காரிலே நிதி மந்திரி! நானோ, இதே அறிக்கையின் வினையாகவேகூட உங்களில் பலராலேகூட, சந்தேகத்துக்கும் நிந்தனைக்கும் ஆளாகக்கூடிய நிலையில் உள்ளவன், ஆனால் நான் கூறுவது, உள்ளத்தில் இருந்து வருபவை.

எனவே இப்போதும், ஆகஸ்ட்டு 15ந்தேதிபற்றி, திராவிடர் கழகத்தின்போக்கை மாற்றலாம்.

இவ்வளவு கூறும் நான், இதற்கு முன்பு, கழகம் எடுத்துக்கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும் வேலை முறைக்கும், கட்டுப்படாமல் இருந்துவந்தவனல்ல. கழகம் நெருக்கடியான கட்டத்திலே இருந்தபோதெல்லாம், விட்டுவிட்டு ஓடினவனல்ல; பட்டம் பதவிகளை வைத்துக்கொண்டு, விட்டுவிடமுடியாது என்று கூறினவனல்ல, தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று கட்சி தீர்மானித்தபிறகு, மீறித்தேர்தலுக்கு நின்றவனல்ல; சிறைபுகவேண்டிய திட்டம் வந்தபோது, ஒளிந்துகொண்டவனுமல்ல; அடிக்கடி, கட்சி பலவற்றைத்தேடிக்கொண்டவனுமல்ல; கட்சிக்குள்ளாகவே, சேலம் மாகாண மாநாட்டின்போது, செல்வவான்களின் பயக்கமொழியில் வீழ்ந்தவனல்ல—இதுவரை வழுக்கிவிழுந்ததில்லை-திட்டங்களைக் கண்டித்ததோ மாற்றவேண்டுமென்று கூறினதோ—கட்டுக்கு அடங்க மறுத்ததோ இல்லை—ஆனால் இந்த ஆகஸ்ட்டு 15ந்தேதி பற்றிய பிரச்னை, உண்மையாகவே, என்போல் எண்ணற்றவர்கட்கு மனவேதனை தரக்கூடியவிதத்திலே, தவறானமுறையிலே, திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான் ஆகஸ்ட்டு 15ந்தேதியை துக்கநாள் என்று அறிவித்து, அதற்காகஅறிக்கைகள் வெளியிட்டு, வருவது, தவறு என்று தெரிவிக்கலானேன். ஆகஸ்டு 15ந்தேதி நாமும் கலந்துகொண்டாடவேண்டிய, மகிழ்ச்சிதரும்நாள், உலகத்தின் முன்பு நம் மதிப்பை உயர்த்தும் நாள், என்று, நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். நம்புவதுடன், ஆகஸ்ட்டு 15ந் தேதி விழா கொண்டாடுவது, எந்தவகையிலும் தவறோ, துரோகமோ அல்ல என்று எண்ணுகிறேன்.

இது கட்சிக் கட்டுப்பாட்டையும் தலைவரின் அறிக்கையையும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்க, முன் வருவதானாலும், என் வாழ்

(அடுத்த பக்கம் பார்க்க)

நாளில், பிரிட்டிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவனே நான் என்பதை மக்களுக்குக் கூற எனக்கிருக்கும் ஒரே நாளான, கடைசிநாளான, ஆகஸ்ட்டு 15ந்தேதியின் முக்யத்துவத்துக்காக வேண்டி கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன்.

தலைவரும், கட்சியும், என்போக்கு தவறு என்று கருதி, என்னைக் கட்சியைவிட்டு நீக்கினாலும் நான், சமூகசீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிடத் தனி அரசு, எனும் அடிப்படைக்கொள்கைகளைக், கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன் என்பதைக்கூறி, இந்த அறிக்கையை முடிக்கிறேன்.

வணக்கம்.

**சி. என். அண்ணாத்துரை.**

---

## இழந்த இன்பம்

16-ம் பக்கத் தொடர்ச்சி

இழந்த இன்பத்தை எண்ணி துக்கமடைகிறோம், இனி என்றாவது மீண்டும் அந்த இன்பத்தை, திராவிடத் தனி அரசை நாம் பெற முடியுமா, என்று ஏக்கமும் பிறக்கும்போது, துக்கமோ, ஏக்கமோ வேண்டாம், இந்திய துணைக் கண்டம் முழுவதுமே வெள்ளை ஏகாதிபத்யத்தின் பிடியில் சிக்கியதால், துக்கமும் ஏக்கமும் கொண்டு, மீண்டும், என்றேனும் விடுதலை கிடைக்குமா, எப்படி அவனை எதிர்ப்பது, அவன் நவீன யுத்த தளவாடங்கள் உள்ளவனாயிற்றே, நம்மிடம் இல்லையே, நாம் எப்படி அவனிடமிருந்து ஆட்சி உரிமையைப் பெறமுடியும் என்று திகைப்பு இருந்ததும் மாறி, ஆகஸ்ட்டு பதினைந்தில், வெள்ளையன் ஆட்சி ஒழிந்தது என்று கூறும் நிலை வந்திருக்கிற சம்பவம், நமக்கு மகிழ்ச்சி ஊட்டுவதுடன், நாமும், நாம் சில ஆண்டுகளுக்கு முன்பு உணர்ந்துகொண்டு மக்களுக்கு உரைக்கத் தொடங்கிய, திராவிடத் தனி அரசை, நாம் இழந்த இன்பத்தை, மீண்டும் பெற முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுவோம். எனவே, திராவிடத் தனி அரசாகிய, நமது இழந்த இன்பத்தை எண்ணும்போது துக்கம் பிறந்தாலும், அதனை நாம் மீண்டும் பெறமுடியும் என்ற நம்பிக்கையை, வெள்ளையனின் ஆட்சி ஒழிகிறது என்ற மகிழ்ச்சியின் மூலம் பெற முடியும்—பெறுவோம். ஆகஸ்ட்டு 15, அறுவடை தினம் மட்டுமல்ல, விதைதூவும் நாளும்கூட!

நாம் மேலே குறிப்பிட்ட, 'திராவிடத் தனி அரசு' வரலாற்று உண்மை, நெடுங்காலமாக, நமது மக்களிடமிருந்து மறைக்கப்பட்டு வந்தது. மக்களும் இந்த உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணங்கூடக் கொள்ளாமலிருந்தனர். அதற்குக் காரணம், நாம், 'இழந்த இன்பம்'—பழங்கதையாகும்படி, வேறோர் சம்பவம் இங்கு நடைபெற்று விட்டது—அதுதான், வெள்ளையர், திராவிடம் உட்பட, இந்திய துணைக் கண்டத்தின் சகல பகுதிகளையும் பிடித்துக்கொண்டது. திடீரென நேரிட்ட, இந்தச் சம்பவம், நமது மக்களைத் தமது பழைய நிலைபற்றிக்கூட மறக்கச் செய்து விட்டதுடன், புதிதாக வந்த விபத்தான, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின்மீதே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வைத்ததுடன், சுதந்திரம், விடுதலை, என்றால், வெள்ளையரிடமிருந்து நாட்டை மீட்பதுதான் என்று எண்ணச் செய்தது. அந்தஎண்ணத்தின்படி, இங்கு, விடுதலை பெறுவதற்கானகிளர்ச்சி, ஏகாதிபத்யத்துக்கு எதிரிடையான நடவடிக்கைகள், ஆரம்பமானபோது, 'திராவிடத் தனி அரசு' பற்றிய எண்ணம், மறையலாயிற்று. விடுதலை விரும்பிகளின் முழு நேரமும், முழுச் சக்தியும், ஏகாதிபத்ய ஒழிப்பு என்பதிலேயே சென்றது—அதனால், திராவிடர் தனி இனம்—அவர்களின் நாடு, அசோகர் முதலான சாம்ராஜ்யாதிபதிகள் காலத்திலும் தனித்தே இருந்துவந்தது, அவர்களின் ஆட்சியை அவர்களே பெறுவதே முறை, என்ற உண்மைகள், மறையலாயின. அடியோடு மறைந்தே விடுமோ என்று அஞ்சக்கூடிய அளவு இந்தியா ஒரே நாடு—அதற்கு ஒரே அரசு—அது இன்று வெள்ளையர் எனும் அன்னியரின் அரசாக இருக்கிறது—அந்த இழிநிலையை மாற்றி, நமது நாட்டை நாம் ஆளவேண்டும், என்று பொதுவாகப் பேசப்பட்டது.

★

**நமது நாட்டை நாம் ஆளவேண்டும்**—என்றால், திராவிடர்களாகிய நாம் திராவிட நாட்டை ஆளவேண்டும், என்ற உண்மைப் பொருளிலே, பேசப்படவில்லை—இந்தியாவை இந்தியர் ஆளவேண்டும் என்று பேசப்பட்டது. அந்த முரசொலியின் காரணமாக, மக்கள் முழு உண்மையைஉணரும்வாய்ப்பு ஏற்படாமல்போய் விட்டது. திராவிடர்உட்பட—அனைவரும் வெள்ளை ஆட்சி நீங்கிய பிறகே வேறு வேலைகளைக் கவனிக்க முடியும் என்று கூறிக் கிளர்ச்சி செய்தனர்—அந்த நீண்ட கிளர்ச்சி முடிவடைகிறது ஆகஸ்டு பதினைந்துடன். இனித்தான், நாம் கூறும், திராவிடத்தனி அரசு எனும் வரலாற்று உண்மையை உணரும் மனப்போக்கு, மக்களிடை அதிகமாக ஏற்பட முடியும். இழந்த இன்பம் — முழுவதையும் நாம் பெற்றுவிடவில்லை — இழந்த இன்பம், என்றால் இந்தியாவை வெள்ளையரிடம் இழந்தது மட்டுமல்ல — திராவிடத்தைப் பிறரிடம் இழந்ததுமாகும்—முதற் பகுதி, வெள்ளையரை நீக்கிய பகுதி முடிவடைந்தது — இனி மற்றப் பகுதி, திராவிடத்தை, வடநாட்டார் பிடித்தாட்டுவதை நீக்கும் பகுதி, இனித்தான் ஆரம்பமாக இருக்கிறது என்பதை ஆகஸ்டு பதினைந்து மக்களுக்கு அறிவிக்கிறது. இதுவரை இருந்து வந்த மூடுபனி — விலகுகிறது ஆகஸ்ட்டு 15 ல்—இனி நாம் கூறும் வரலாற்று உண்மைகள், மக்களின் கண்களுக்குப் பளிச்செனப்படும்.

நேற்று நாம் வெள்ளையரிடம் அடிமைகளாகி நொந்தோம், இன்று அவர்களிடமிருந்து விடுதலை பெற்றோம், என்று ஆகஸ்ட்டு பதினைந்தாம் தேதி, அகமகிழ்வுடன் பேசியான பிறகு, நாளை, என்ன? என்ற கேள்வி எழும்—அந்தக் கேள்விக்குப் பதில்தான், திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டும் என்பது— இழந்த இன்பத்தை நாம் மீண்டும் பெற்றாக வேண்டும் என்பது.

இழந்த இன்பத்தை நாம் நிச்சயம் பெறுவோம், ஆகஸ்ட்டு பதினைந்திலே ஆங்கிலேயனால் பறிக்கப்பட்ட சுதந்திரத்தை நாம் மீட்டதைப் போலவே.

ஆகஸ்ட்டு பதினைந்து நமக்கு, அந்த மகிழ்ச்சியுடன் கலந்த நம்பிக்கையைத் தருகிற நாள்—பெற்றோம் இழந்ததை—பெறுவோம் இழந்ததை—என்பது நமது கீதமாகட்டும்.—

"திராவிடஸ்தான்"

உயர் திரு எஸ். முத்தையா முதலியார் எழுதியது.

**48 பக்கங்கள்**
**உயர்ந்த பதிப்பு**
**விலை 10 அணா**

**'திராவிட மணி'**
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

தனிப்பிரதி தபாலில் பெற விரும்புவோர் 0–14–0 அணா அனுப்பவும்.

# பதினாறு ஆண்டுகளில்?

அவர் ஒரு ஆங்கிலேயர். தொழிற் சங்கத் தொடர்புடையவர். பாராளு மன்றத்தின் அங்கத்தவராகவும் இருந்ததுண்டு. 'அடிமை இந்தியா' என்ற நூலின் ஆசிரியர். சமதர்ம லட்சியம் கொண்டவர். இந்தியாவின் அரசியல் விடுதலைக்குச் சொல்லாலும் எழுத்தாலும் தொண்டாற்றியவர். பதினாறு ஆண்டுகட்குமுன் அவர் இங்குள்ள நிலைமையைச் சுற்றிப் பார்த்தவர். சென்ற ஆண்டும் இங்குவந்து ஐந்து திங்கள் தங்கி நாட்டு நிலையைத் தெரிந்திருக்கிறார். பிரேய்ல்ஸ் போர்ட் அவர் பெயர். இக்குறுகிய காலத்தில் இங்கு ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியைக் குறித்து, இங்கிலாந்து வானொலியில் சில கூறியுள்ளார். அதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

"வெளித் தோற்றத்தில் எதுவும் மாறுதல் இல்லை. கிராமங்கள் அன்று கண்டதுபோல்தான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்துவந்த உழவு முறைதான். பஸ்களும், லாரிகளும் அதிகரித்திருந்தாலும் கட்டை வண்டிக்கும் ஒட்டகத்திற்கும் மூட்டை தூக்கும் வேலைக்குக் குறைவில்லை. எல்லாவற்றிலும் பெரிய மாறுதல் அரசியல் துறையில்தான்."

இதில் எது குற்றமுடையது? நாட்டிலே இன்று வழக்கத்தில் இல்லாதது? அதே கலப்பைதான் — வாலொடிந்த மாடுதான் — எலும்புந் தோலுமான உருவந்தான். நிலத்திலே விதையைத் தூவிவிட்டு, வரப்பின்மேல் நின்று, வாயைப் பிளந்து கொண்டு, வானத்தைப் பார்க்கும் வேலைதானே ஏழை உழவனுக்கு இருப்பது! கட்டை வண்டியில் சுமை ஏற்றி நொண்டிநொண்டிச் செல்லும் சண்டி மாடுகளை மட்டுமா நாம்பார்க்கிறோம்? மாடாக உழைக்கும் மனித உருவங்களை அல்லவா அன்றாடம் காண்கிறோம்!

"பதினாறு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில், நான் எதிர்பார்த்ததை விட வெகுவிரைவாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெஷாவரிலிருந்து பங்களூர் — பூனாவிலிருந்து கல்கத்தா — ஆக நாடு முழுதும் புதிய புதிய தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. பழைய டெல்லியில் ஆலைகளின்புகைபோக்கிகள்வான்முட்டக் கோபுரம்போல் உயர்ந்திருக்கின்றன. பெஷாவர் நகரின் கடைத்தெருவில் இயந்திரத்தால்ஆக்கப்பட்டபொருள் குவிந்து கிடக்கிறது. நிரம்ப மட்டரகம் — அவலட்சணம். கையால் நெய்த அழகிய ஆடைகளை விற்கும் வியாபாரியைக் கண்டுபிடிப்பதற்கு அதிகப் பொறுமை வேண்டும்."

ஆம்; உண்மைதான்! இந்த ஆங்கிலர் கூறுவது மறுக்கமுடியாத உண்மைதான். தொழில் வளம் வடநாட்டோடு நின்றுவிட்டது — அணை போடப்பட்டது வேண்டுமென்றே. வடநாட்டில் தொழில் வளம் பெருக — வாணிபம் உயர — தென்னாடு சந்தையாகப் பயன்பட்டு விட்டது. இயற்கை வளம் இங்கிருந்தும் சர்க்கரைக்கு வடநாட்டைத்தான் எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. முக்கிய உணவிற்கும் அதுதான் கதி. எண்ணெய் வித்துக்கள் இங்கு ஏராளமாக உற்பத்தியாக்கப்பட்டும், வடநாடு சென்றுதான் வனஸ்பதியாக மாறி இங்கு மார்க்கெட்டில் விற்பனையாகிறது — அதுவும் நல்ல கிராக்கியுடன். மண் எண்ணெய் விளக்கு, சிம்னி, கண்ணாடி டம்ளர் இன்னும் இதுபோன்ற பலவும் வடநாட்டில் தயாராகி, இங்கு வருகிறது நமது மடியைத் தடவ. இதனைத் தான் நாம் தடுக்க வேண்டுகிறோம். இதற்கான அதிகாரம் நமக்குஇருக்க வேண்டுகிறோம். தென்னாடு தனியாக்கப்பட வேண்டும் என்பது இதனை மூலமாகக் கொண்டுதான். நமது போக்குக் கண்டு சீறுகிறவர்கள் வடநாட்டில் உள்ள தொழில் வளம் குறித்து, அதுவும் பதினாறு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது பற்றி, இந்த ஆங்கிலர் கூறுவதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

"எல்லாவற்றிலும்கேவலமானது, பெரிய நகரங்களில் மக்கள் தொகை பெருகுவதுதான். போர்க்காலத்தில் பம்பாயில் மக்கள் கூட்டம் இருமடங்காகி இருக்கிறது. மற்றும் பல தொழில் வளம் உள்ள பகுதிகளின் நிலைமை இதுவேதான். வருவாயிலும் உற்பத்தியிலும் வளர்ச்சியை எதிர்பார்ப்பது இயற்கை. ஆனால் இதன் நிலையை நான் அறிய வந்ததும், இருதயம் நின்றுவிட்டதுபோல் ஆனேன். ஆலைத் தொழிலாளர்கள் குடியிருப்பில் ஜனப் புழுக்கம் இருந்ததைப் பதினாறு ஆண்டுகட்கு முன்பு கண்டபொழுதே வேதனைப்பட்டேன். இன்று அவர்கள் நிலை மிக மிகக் கேடாகப்போய்விட்டது, அன்றிருந்ததைக் காட்டிலும். அந்த நச்சுக் காற்றில் அவர்கள் உயிரோடு இருக்கலாம்; சாக்கடையில், பெரிய சந்தடிக்கிடையில் அவர்கள் உயிருடன் இருப்பது என்றால் விளக்கமுடியாத அற்புதமாகவே இருக்கிறது. ஆனால் இயற்கை நியதிப்படி அவர்கள் அதிக நாள் உயிரோடு இருக்கமுடியாது. குடும்பத்திற்காகப் பட்ட கடனைத் தீர்க்கும் அளவிற்கு அவர்கள் சம்பாதித்துவிட்டால், மனமுடைந்த மக்களாகச் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிவிடுவார்கள்."

குடும்பம் பெருத்து விட்டது. குழந்தை! குட்டிகள் அதிகரித்து விட்டன. ஒருவன் உழைத்துப் பலர் உண்ணவேண்டும். உழைத்தாலும் பலன் எதிர்ப்பார்த்தபடி இருப்பதில்லை. இருந்தாலும் வேறு வழி வகை இல்லாததால், வறுமை தந்த வாட்டத்தைச் சகித்துக்கொண்டு, ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, கஞ்சி குடித்ததும் குடிக்காததுமாகக் காலம் கழித்துவந்தனர். இந்தச் சூழ்நிலையில் தொழிற்சாலை ஓர் வாழ்வளிக்க வந்த சாதனமாக இருக்கிறது. நிலத்தில் சிந்திய வியர்வை வேண்டிய அளவிற்குப் பயன் தரவில்லை. எனவேதொழிற்சாலைச்சங்கின்நாதம் கேட்டதும், மக்கள்புகுந்தனர் அங்கு உழைக்க. உற்பத்தி பெருகிற்று. அதனால் உழைப்பாளரின் உண்மைச் சக்தியும் வெளியாயிற்று. தேவையான பொருள்களை மலைமலையாகக் குவித்தனர். ஆலை அரசர்கள் தோன்றினர். அவர்கள் உடல் பருத்தது. உல்லாச வாழ்வு வளர்ந்தது. இரும்புப் பெட்டி பெரிதாயிற்று. பல ஆலைகளின் சொந்தக்காரர்கள் ஆயினர். ஆனால் உழைத்தவர்களுக்குக் கிடைத்ததென்ன? வயிறார உணவா? நல்ல ஆடையா? வசதியான வீடா? அந்தோ! அது ஒன்றும் இல்லை. கிராமத்தைக் காட்டிலும் நகர வாழ்வில் அவர்கள்பெற்றது நரகவேதனைதான். இதனைத்தான் அந்தஆங்கிலேயர் வேதனையிருக்கென்கிறார்; தொழிலாளர்கள் நச்சுக் காற்றிலே நடமாடுகிறார்கள் என்கிறார். கிராமத்திலாவது நல்ல காற்றைச்சுவாசிக்கலாம். அதுவுமில்லையே ஆலைப்புரியில். வறுமை போக

வில்லை. முன்னிலும் துன்பம் அதிகமாயிற்று.

உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. எனவே கடன் படுகிறார்கள் ஜாண் வயிற்றைக் கழுவ; குடும்பத்தைக் காப்பாற்ற. பட்ட கடனை எப்படித் தருவது? வட்டி என்ன குறைவானதா? ரூபாய்க்கு நான்கணா இரண்டணா தர்ம வட்டிதானே? வட்டியும் முதலும் சேர்த்தல்லவா தரவேண்டும்? வட்டி கட்டுவதற்கே அவர்கள் வருமானத்தின் பெரும் பகுதி போய் விடும். பலன் பெருங் கவலை. மரணத்தை மண்டியிட்டு வரவேற்கும் நிலைதான் முடிவு.

தொழில்வளம் ஏற்பட்டும் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத்தரம் உயரவில்லையே? தொழில் வளம் உள்ள நாடுகளிலெல்லாம், தொழிலாளர்கள் இத்தகைய சொத்தை வாழ்விலா வாழ்கிறார்கள்? உலகத்தின் தொழிற்சாலையாக அல்லவா இங்கிலாந்து இருந்தது? அங்கு தொழிலாளர் இந்த அலங்கோல நிலையிலா இருக்கிறார்கள்? அங்கு கடவுள் அவதாரங்கள் எடுத்ததில்லையே? தர்ம தேவதை தலையால் நடக்கும் நமது புண்ய பூமியில் மட்டுமா இந்த அக்கிரமம்? இதனையேதான் வேறு மொழியிலே சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறார் அந்த ஆங்கிலேயர்.

"சென்ற பதினாறு ஆண்டுகளுக்கு முன் இத்துறைகளில் எந்தவித அறிகுறிகளும் கிடையாது. தனிப்பட்டோர் தொழில் திட்டமே சிறந்ததெனும் சித்தாந்தம், அக்காலத்தில் மத்திய சர்க்காரை நடத்தியவர்களின் கொள்கையாக இருந்தது. அதே பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பப் போக்குத்தான், இன்றும் சர்க்காரின் நினைப்பாக இருக்கிறது. நீதி, அமைதி, ஒழுங்கு என்பவை சர்க்காரின் முக்கியவேலையாக இருக்கிறது. இதனைத் தவிர்த்து மற்றவை சந்தேகமே. வட்டாளவிலாவது, மக்களின் சுகம், சொத்து, அறிவு வளர்ச்சி ஆகியவைகளைக் கவனித்துக் கொள்வதுதான் ஒரு அரசின் நீங்காக் கடமையென ஒவ்வொருவரும் நம்புகின்றனர்."

"தொழில் முன்னேற்றத்துடன் உழவர்களின் வாழ்க்கை நிலையும் படிப்படியாக உயரவேண்டும். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தையும் மக்கள் உபயோகப்படுத்துவதற்கான முறையில் மாற்றம் ஏற்படுத்தினாலன்றி, தொழிற்சாலைகளில் உற்பத்திப் பெருக்கம் எனப்பேசுவது அபத்தமாகும். தெளிவாகச் சொல்லவேண்டுமானால், ஆலைகளில் அதிகப்படியாகத் தயாராகும் பொருட்களை வாங்குவதற்கு மக்களிடம் முன்னிலும் அதிகமாகப்பணம்இருக்கப்பார்த்துக் கொள்ள வேண்டும். கிராமங்களின் வருமானத்தைப் பெருக்கப் பல முறைகள் உள்ளன. நில சீர்திருத்தம் — கூட்டுறவு விற்பனை — புதிய முறையில் பயிர் செய்தல் முதலியனவாம். எல்லாவற்றைக் காட்டிலும் நிலமற்ற உழவர்களுக்கு உயிர் வாழ்வதற்கான கூலிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

"புதிய தொழிற்சாலைகளை நிர்மாணித்து உற்பத்தியை அதிகப்படுத்தி விடுவதாலேயே மக்கள் சுகமாக வாழ வழி உண்டாகிவிடாது. உற்பத்தியான பொருட்களை மக்கள் வாங்கி அனுபவிக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உள்ளங்களிலே மகிழ்ச்சி இடம் பெறும். இல்லங்களில் இன்பம் தாண்டவமாடும். இதன்பலனாகமென்மேலும் உற்பத்தி பெருகவும் மார்க்கம் உண்டாகும். நிரந்தரமாக ஆலைகளும் இயங்கிக் கொண்டிருக்கும். இவ்வளவிற்கும் ஏற்பாடு இல்லையானால், உற்பத்தி பெருகாது. தொழிலாளரும் வேலையின்றித் திண்டாட வேண்டிவரும். வறுமைதான் முடிவு. வேதனைதான் பரிசு.

இந்தநிலை ஏற்படாமல் தடுப்பதெப்படி? அவரே அதற்குப் பரிகாரம் கூறுகிறார். இன்று கிராமங்களில் ஒருவர் இருவர் மிட்டா மிராஸ் என்று வாழ்கிறார்கள். மற்றவர்கள் குடியிருக்கும் குச்சுக்கும், பண்ணையின் மனங்கோணாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. உழைத்து உழைத்து உடல் இளைக்கிறார்களேயன்றி, உழைப்பின்பயனை அனுபவிப்பதில்லை. விளைவித்த அவ்வளவையும் மிராசின் சுகபோகத்திற்குச் செலுத்தி வருகிறார்கள். வயல்களைப்பார்த்தறியாதவர்களுக்கு,சேற்றிலே சதாகாலமும் நின்று செந்நெல் விளைவிப்பவர்கள், அதனைக் காணிக்கையாகத் தாரை வார்க்கிறார்கள். உழைக்காதவர்களுக்கு ஊதியம்; பாடுபட்டவர்களுக்குப் பாதகம். இதுதான் பண்ணை முறை. பலகாலமாக நாட்டிலே நடந்து வருவது. இந்த முறையில் அடிப்படை மாற்றம் உண்டாலன்றி, உழவர்கள் கையில் பணம் பெருக வழி பிறக்காது. தொழில் வளமும் சிறக்காது.

சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காப்பாற்றுவதுதான் ஒரு அரசின் கடமை என்று நம்பிவந்த காலம் உண்டு. அந்தக் காலம் மலையேறிவிட்டது. மக்களுக்காக அரசேயன்றி அரசுக்காக மக்களில்லை எனும் கோட்பாடு நிலைபெற்றுவிட்ட காலம் இது. மக்களிடம் பஞ்சம், பிணி, ஏழ்மை, வேலையில்லாமை முதலிய அனைத்தையும் கண்காணிக்க வேண்டியது நல்லாட்சிக்குள்ள நல்ல இயல்புகளாகும். இந்த அளவுகோலுக்கு உட்படாத எந்த அரசும், அந்தப்பெயருக்கே தகுதியற்றதாகும். இதனைத் தான் வற்புறுத்துகிறார் அந்தத் தொழிலாளர் தலைவர்.

"இந்தியாவின் வறுமைக்கு, அரசியல் வரலாற்றிலிருந்தும், மதம் பழக்க வழக்கம் முதலியவற்றிலிருந்தும் காரணம் காட்டுகின்றனர். பல்கிப்பெருகிப்போயிருக்கிற மக்களின் பெருத்த தொழிற் சக்தி முழுதும் உபயோகப்படுத்தப் படவில்லை — அனேகமாக வீணாக்கப்படுகிறது. இதுவன்றோமுக்கியமானஉண்மை?"

"வருஷத்தில் நான்கு மாதத்தில் கிராமத்தவர்கள் வேலையற்றிருக்கிறார்கள். உழவு கருவியோ மிகத் தொன்மையானது, முறையும் பழையது. நவீனகருவிகளுடன் ஒரு ஆள் செய்யும் வேலையைத்தற்சமயம் எட்டு ஆட்கள் செய்வதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். இன்று எட்டு ஆள் வேலை செய்யும் வேலையைப் புதிய முறையால் நான்கு ஆள் செய்து முன்னிலும் அதிகமான விளைவை உண்டாக்கலாம். அதாவது வேறு வேலைகளைச் செய்யும் நால்வருக்கு வேண்டிய அளவு உணவுக்கு வழி பிறக்கும்."

"லட்சக்கணக்கில் மக்கள் வேறு வேலைக்குக் கிடைப்பர். அவர்களுக்குப் பணி என்ன? பள்ளிகள் கட்டலாம்—நல்ல பாதைகள் போடலாம் —மருத்துவச்சாலைகள் நிர்மாணிக்கலாம். சிலர் பாழடைந்த கிராமங்களைச் செப்பனிடலாம். மண்குடிசைகளை மாற்றி அமைக்கலாம். ஆடை நெய்யலாம். கம்பளங்கள் ஆக்கலாம். சுகவாழ்வைக்கொண்டு சேர்க்கலாம். சிலர் காகிதங்கள் உற்பத்தி செய்யலாம். மக்களைக்கற்றவர்களாக்கப்போதிய புத்தகங்களை அச்சி

(16-ம் பக்கம் பார்க்க)

# ★ தேவலோகத்தில் ★

[புதிய புராணந்தான்—ஆனால் பூஜா மாடத்துக்கு அல்ல—புது முறைக்கான எண்ணம் தருவதற்குத் தீட்டப்படுவது. இராமனின் கலியாணகுணங்களைத் தானே, பாடி ஆடி மகிழ்கிறார்கள்—தொழுகிறார்கள்! அந்த இராமனைப்பற்றி, தர்மபத்னி சீதா, என்ன எண்ணுவார் என்பதை விளக்கும் கற்பனை இது.]

இடம்:- தேவலோகத்தில் ஒரு நந்தவனம்.

இருப்போர்:- அகலிகை, தோழி, சீதை.

(அகலிகையும், தோழியும் பூ பறித்துக்கொண்டே பேசுகிறார்கள்.)

அ:- என்னதான் சொல்லடி, அவர் கருணாமூர்த்தி என்றால் கருணாமூர்த்திதான். என்னை என் கணவர், கல்லாகும்படி சாபம் இட்டுவிட்டார் — கவனிப்பாரற்றுக் கிடந்தேனல்லவா! — வெகுகாலம்— எவ்வளவோ உத்தமர்கள், தபோதனர்கள் அவ்வழி போய்க் கொண்டும் வந்து கொண்டுந்தான் இருந்தனர்— ஒருவர் மனதிலும் துளி இரக்கமும் உண்டாகவில்லை.

தோ:- கல்மனம் படைத்தவர்கள்.

அ:- கனிவகைகளாகக் கொடுத்திருப்பேன் அவர்களில் எவ்வளவோ பேருக்கு. காலைக்கழுவி, மலர்தூவி இருப்பேன் — ஒருவருக்கும் இரக்கம் எழவில்லை. கடைசியில், என் ஐயன், கோதண்டபாணி, மனதிலே இரக்கம் கொண்டு என்னைப் பழையபடி பெண் உருவாக்கினார்—என் கணவரையும் சமாதானப்படுத்தினார் —அவருடைய இரக்கத்தால்தான் எனக்கு விமோசனம் கிடைத்தது.

(அகலிகை பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்த சீதை)

சீ:- எவருடைய இரக்கத்தால்?

(அகலிகை ஓடிவந்து சீதையின் பாதத்தில் மலர்தூவி, நமஸ்கரித்த பிறகு தோழியும் நமஸ்கரிக்கிறாள்.)

அ:- அன்னையே! நமஸ்கரிக்கிறேன். தங்கள் நாதன், ஸ்ரீராமச்சந்திரருடைய கலியாண குணத்தைத் தான் கூறிக் கொண்டிருந்தேன். அவருடைய கருணையால் தான் இந்தப் பாவிக்கு, நற்கதி கிடைத்தது.

சீ:- அவரைத்தான் இரக்க மனமுள்ளவர் என்று புகழ்கிறாயா?

அ:- ஆமாம், அம்மணி! ஏன்!

சீ:- அவரையா! அடிபாவி! அவருக்கா இரக்கசுபாவம் என்று வாய் கூசாது கூறுகிறாய்.

அ:- (திகைத்து) தாயே! என்ன வார்த்தை பேசுகிறீர்.

சீ: பைத்யக்காரி! இரக்க சுபாவமா அவருக்கு! என்னைக் காட்டுக்குத் துரத்தினாரே, கண்ணைக்கட்டி, அப்போது நான் எட்டுமாதமடி! முட்டாளே! கர்ப்பவதியாக இருந்த என்னைக் காட்டுக்கு விரட்டின கல் மனம் இருந்தவரை, இரக்கமுள்ளவர் என்று சொல்கிறாயே. எவனோ, எதற்காகவோ, என்னைப்பற்றிப் பேசினதற்காக ஒருகுற்றமும் செய்யாத என்னை — தர்மபத்னி என்ற முறையிலே அவருடன் 14 வருஷம் வனவாசம் செய்த என்னை—ராவணனிடம் சிறைவாசம் அனுபவித்து அசோகவனத்திலே அழுது கிடந்த என்னை, கர்ப்பவதியாக இருக்கும் போது, காட்டுக்குத் துரத்திய காகுத்தனைக் கருணாமூர்த்தி என்று புகழ்கிறாயே! கலனுருவிலிருந்து மறுபடியும் பெண் ஜென்மம் எடுத்தது இதற்கா? கடைசியிலும் என்னை சந்தேகித்து, பாதாளத்தில் அல்லவா புகவைத்தார். அப்படிப்பட்டவரை, அகல்யா! எப்படியடி, இரக்கமுள்ளவர் என்று கூறுகிறாய். விலவீரன என்று புகழ்ந்து பேசு, சத்துரு சங்காரன் என்றுபேசிச் சாமரம்வீசு, என்ன வேண்டுமானாலும் பேசு புகழ்ச்சியாக, ஆனால் இரக்கமுள்ளவர் என்றுமட்டும் சொல்லாதே இனி ஒருமுறை—என் எதிரில். "பிராணபதே! என்னைப்பாரும்! இந்தநிலையிலா, என்னைக் காட்டுக்குத் துரத்துகிறீர்? ஐயோ! நான் என்னசெய்தேன்? குடிசையிலே இருக்கும் பெண்களுக்குக்கூட, கர்ப்பகாலத்திலே, சுகமாக இருக்கவழி செய்வார்களே! சக்ரவர்த்தியின் பட்டமகிஷியான எனக்கு, இந்தக்கதியா? நான் எப்படித்தாளுவேன். பிரியபதே! என்னைக் கவனிக்காவிட்டால் போகிறது, என் வயிற்றிலுள்ள சிசு — உமது குழந்தை—அதைக்கவனியும். ஐயோ கர்ப்பவதிக்குக் காட்டுவாசமா? ஐயோ! உடலிலே வலிவுமில்லை— உள்ளமோ, துக்கத்தையோ, பயத்தையோ தாங்கும் நிலையிலே இல்லை. இந்தநிலையிலே என்னைக் காட்டுக்குத் துரத்துவது தர்மமா? நியாயமா? துளியாவது இரக்கம் காட்டக் கூடாதா? அழுதகண்களுடன் நின்று அவ்விதம் கேட்டேனடி அகல்யா! என் நாதரிடம்.

அசோக வனத்திலேகூட அவ்வளவு அழுததில்லை.

அவனிடம் பேசினபோதுகூட, என்குரலிலே, அதிகாரம் தொனித்தது; மிரட்டினேன், இவரிடம், கெஞ்சினேன். ஒரு குற்றமும் செய்யாத நான் — இரக்கம் காட்டச்சொல்லி இரவிகுலச்சோமனைக் கேட்டேன்.

சீதா! நான் ராமன் மட்டுமல்ல, ராஜாராமன்!—என்றார்.

ராஜாராமன் என்றால், மனைவியைக் காட்டுக்கு அனுப்புமளவு கல் நெஞ்சம் இருக்கவேண்டுமோ என்று கேட்டேன்.

அகல்யா! என் கண்ணீர் வழிந்து கன்னத்தில் புரண்டது. புயலில் சிக்கிய பூங்கொடிபோல் உடல் ஆடிற்று. என்நிலையை அந்த நேரத்தில் அரக்கனான இராவணன் கண்டிருந்தால்கூட உதவி செய்வானடி. ஆனால் நீ புகழ்ந்தாயே கருணாமூர்த்தி என்று, அவர், என் கண்ணீரைச் சட்டை செய்யவில்லை—நான் பதறினேன், கருணை காட்டவில்லை, காலில் விழுந்தேன்— ஏதோ கடமை கடமை என்று கூறிவிட்டு, என்னைக் காட்டுக்குத் துரத்தினார். அப்படிப்பட்டவரை, தன் பிராண நாயகியிடம், ஒரு பாவமுமறியாத பேதையிடம், கர்ப்பவதியிடம், கடுகளவு இரக்கமும் காட்டாதவரை, அகல்யா! புத்திகெட்டவளே! கூசாமல் கூறுகிறாய், இரக்கமுள்ளவரென்று. இனி ஒருமுறை கூறாதே; என் மனதை வேகவைக்காதே."

[சீதை, கோபமாகச் சென்றுவிட, அகல்யா, திகைத்து நிற்கிறாள்.]

❋


## பொன்னி

ஆசிரியர் : முருகு சுப்பிரமணியன்

விலை அணா 8

ஆண்டுச் சந்தா ரூ 6/-

எங்கும் ஏஜண்டுகள் தேவை

"பொன்னி" அலுவலகம்.

கீழராஜ வீதி, :: புதுக்கோட்டை

14-ம் பக்கத் தொடர்ச்சி

யற்றலாம். நான் தெரிந்தவரையில் இதற்குத்தான் தொழில் வளர்ச்சி செய்தல் என்பதாகும். வயல்களில் மீதமாகும் தொழிற் சக்தியைக் கொண்டு, மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் சாதனங்களைப் பெருக்கலாம். தொழிற்சாலைகளிலுள்ள மின்சார கருவிகளால் குறுகிய காலத்தில்—குறைந்த முயற்சியில் இவ்வளவும் செய்து முடிக்கலாம்.''

இங்குள்ள வறுமைப் பிணிக்கு விஞ்ஞானத்தைத் துணைகொள்ள வேண்டுமென்று அவர் கூறுகிறார். அதனால் தான் வறுமை போகும். ஆனால் இங்கு நாம் காண்பதென்ன? 'ஆசையைஅகற்று; அறியாமையைத் துணைகொள்; வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம்' எனும் சத்போதனையைத் தானே மகாத்மா முதல் மன்னார்சாமி வரையில் போதித்து வருவதைப் பார்க்கிறோம். ஆனால் அதே நேரத்தில் ஆலை அரசர்கள் உழைப்பாளியை உறிஞ்சி ஒன்றுக்குப் பத்தாகக் கொள்ளை லாபம் அடைந்து மற்ற மக்களைக் கோவணாண்டிகளாக வைத்திருப்பதைக் காண்கிறோம். இங்குதொழில் திட்டம் அனைத்தும் முதலாளிகளின் தொப்பைக்குப் பராக்கும் பாதுகாப்பும் கூறுவதாகவன்றோ அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆபத்தான திட்டத்திற்கு அழிவு ஏற்படாமல் பாதுகாததுக் கொள்ளவன்றோ, அரசியல் பீடத்திலுள்ளோர் ஆர்ப்பாட்டஞ் செய்கின்றனர். இந்தச்சூழ்நிலையில் தொழிலாளர்கள் சுகம் பெறுவதெங்கே? மற்ற மக்கள் வாழ்வடைவதெங்கே? அவசியமில்லாத நிலையில் சிலரின் சுகபோகம் வளரவும், அதன் நடுவில் எழ்மை துள்ளிக் குதிக்கவுமான நிலைதானே நீடித்துநிற்கும்?

கைஇராட்டினம் காட்டும் பாடம் பாதை அதுதானே? இராட்டினம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாதே! ஓய்வில்லாத உழைப்பாளியிடம் ஓய்வில்லாத உயர்ந்த பண்பாடு தோன்றுவதெங்கே? உரிமை வேட்கை தான் இடம் பெறுமா அந்த உள்ளத்தில்? நலிந்து போன சமுகமாக வல்லவா காட்சிதரும்? பஞ்சம் நீங்குவதெங்கே? பிணிபோவதெங்கே? பாழடைந்த கிராமங்கள் பட்டிமன்றங்களாக மாறுவதெங்கே? வெறும் பகற்கனவு!

இங்கு மக்கள் வாழ்வுக்குத் திட்டம் தீட்டப்படவில்லை. சிலரின் சுரண்டலுக்குத் தான் தொழில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் வடநாட்டு முதலாளித்துவத்திற்கு. இலாபவேட்டையே அவர்களின் குறிக்கோள். மக்களின் முன்னேற்றம் என்பதை அவர்கள் கனவிலும் கண்டறியார். பதினுறே ஆண்டில் தொழிற்சாலைகள் பெருகினது உண்மைதான். அதற்கேற்றாப்போல் தொழிலாளர்கள் சுகம் பெறவில்லை. மக்கள் வாழ்வு வளமாக வில்லை. பாழான பஞ்சம் பிணியிலிருந்து மக்கள் விடுதலை அடையவில்லை. மதிதுலங்கவில்லை, ஆராய்ச்சி பெருகவில்லை, ஆனால் ஏகாதிபத்தியம் இணக்கங்காட்டவும், தாகர்கூட்டம் தாணிஆளவும், திரைமறைவிலிருந்து அவர்களை ஆட்டி அலக்கழிக்க பிர்லாவும்—டாடாவும் தகுதி பெறவுமானபலன் ஏற்பட்டது. நீடித்து நிலையாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் என்றும் மக்கள் ஏமாளிகளாகவே இருக்கமாட்டார்கள்—தாமதமாகலாம்—முடிவில் தகுதியற்றோர் தரையைக் கவ்வுவர். மக்கள் ஆட்சி மலர்ந்து மணம் தரும்!

✲

4-ம் பக்கத் தொடர்ச்சி

கர், ஹர்ஷர், சந்திரகுப்தமௌரியர், சமுத்திர குப்தர், அக்பர் என்ற பெயர்கள் பொறிக்கப்படும். இவர்கள், சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தி, கீர்த்தியுடன் வாழ்ந்தவர்கள். ஆனால் இத்தனை மன்னாதிமன்னர்கள் இருந்தபோதும், திராவிடநாட்டை அவர்கள் ஆளவில்லை. திராவிடநாடு திராவிடருக்கே தான் இருந்தது.

இடிந்த கோட்டைகள், விந்திய மலைக்கு மேலேயே தவிரக் கீழே அல்ல! தோற்ற மன்னர்கள், நர்மதை நதிக்கரைக்கு அப்புறமே தவிர இப்புறமல்ல.

✲

## சோவியத் நாட்டில்?

''முதலாளித்துவ முறையினால் தான் அறிவுவளரும். லாபஆசைஇருந்தால்தான் விஞ்ஞானம் வளர்ச்சியுறும். தொழிற்சாலையில் போட்டி இருந்தால்தான் புதிய புதிய இயந்திரங்கள் ஆக்கப்படும். செய்கின்ற கருவிகளும் மிக மிக உயர்ந்தனவாக இருக்கும். உற்பத்திப் பெருக்கமும் உண்டாகும்.'' இவ்வளவும் பேசுவர் முதலாளித்துவப் போக்கில் பற்றுதலுடையார். இத்தகைய போக்கினர், சோவியத் ரஷ்யாவையும், அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் குறித்தும் உண்மையை மறைத்துப் பேசிவந்தனர். அங்கு மக்களின் வாழ்க்கைத்தரம் நிரம்பக் கேவலமான நிலையில் இருக்கிறதென்றும், அவர்களின் தொழில் திறமையும் பயனற்றது என்றும் இட்டுக்கட்டிப் பேசிவந்தனர். இவ்வளவையும் பொய்யாக்கிவிட்டது சென்ற போர்.

இங்கிலாந்திலுள்ள தொழில்திறம் படைத்தோர் சங்கம், தோழர் ஜாக்டானர் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை ஏற்பாடு செய்தது, உண்மையைத் தெரிய. உக்ரேன், மாஸ்கோ, லெனின்கிராட் முதலிய நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளையும், தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடங்களையும் பார்வையிட்டனர். வேறு எந்நாட்டிலும் இல்லாத அளவிற்கு அங்கு ஆண் பெண் இருபாலருக்கும் தொழில் பயிற்சி மிகச் சிறந்த முறையில அளிக்கப்படுகிறதாகவும், கூடியவிரைவில் இங்கிலாந்தைத் தொழில் முன்னேற்றத்தில் பின்னடையச் செய்துவிடுமென்றும், அக்குழுவினர் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. உலகத்தின் தொழிற்சாலையாக உள்ள இங்கிலாந்தே சோவியத்நாட்டின் தொழில் வளர்ச்சிபற்றி ஏங்கும் நிலைக்கு, அங்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை முதலாளித்துவம் சாட்டிவந்த குற்றம், ஆதாரம் அற்றது என்பது வெளியாயிற்று.

Edited Printed Published by C N Annaduarai. M. A., at "Dravida Nadu" Press, 817—819 Hodgsonpet Conjeeveram.